
# மருதூர்
# கலை இலக்கிய பூங்கா – 2020





கலாசார அதிகார சபை மற்றும் கலாசார பிரிவு
பிரதேச செயலகம்
சாய்ந்தமருது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. SITHY JASEERA
Development Officer (CA)
Dept. of Muslim Religious &
Cultural Affairs
Divisional Secretariat
Sainthamaruthu

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கலை இலக்கிய விழா 2020*

# மருதூர் கலை இலக்கிய பூங்கா

கலாசார அதிகாரசபை மற்றும்
கலாசார பிரிவு
பிரதேச செயலகம் சாய்ந்தமருது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரமைப்பு

## ஆலோசகர்கள்

**ஏ. எம். அப்துல் லத்திப்**

*மேலதிக மாவட்ட செயலாளர்*

**ரீ. எம். றின்ஸான்**

*மாவட்ட கலாசார உத்தியோகத்தர்*

## மலராக்க ஒருங்கிணைப்பு

**அப்துல் ஹமீட் ஷபீகா**

*கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்.*

## இயக்கம், மலர்த் தொகுப்பு

**ஏ. எச். ஏ. பஷீர்**

*அதிகார சபை உப தலைவர்*
*மற்றும் ஓய்வுநிலை அதிபர்.*

## வெளியீடு

**கலாசார பிரிவு**

**பிரதேச செயலகம்**
**சாய்ந்தமருது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நோக்கு

அமைதியான, ஒழுக்கமான, முழுமையான,

சிறந்த மனிதர்களைக் கொண்ட

புனித தேசத்தை ஒன்று சேர்ந்து கட்டியெழுப்புவோம்...

### பணி

இலங்கையை அடையாளப்படுத்தும்

இலக்கிய கலை மற்றும் கலாசார விடயங்களை

பாதுகாத்து மேம்படுத்தும் மற்றும் வியாபித்தல் தொடர்பாக

வேலைத்திட்டங்களை உருவாக்குதலும் நடைமுறைப்படுத்தலும்.

## சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் நோக்கு

### தூர நோக்கு

சமூகத்திற்கு பயன்தரும் வகையில்

மக்களின் வாழ்க்கை முறையினை

வலுப்படுத்தக் கூடிய உன்னதமான

நிறுவனமாக செயற்படுதல்.

### எங்கள் பணி

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கேற்ப

சேவை வழங்குவதும்

மக்களின் பங்களிப்புடன் வளங்களை

முறையாகப் பயன்படுத்தி

திட்டமிட்ட வகையில் செயற்திறன்மிக்க

அபிவிருத்தி முன்னெடுப்புகள் ஊடாக

மக்களின் வாழ்க்கை முறைமையினை

விருத்தி செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலாளரின் ஆசிச் செய்தி



சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார பிரிவும் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடாத்தும் இலக்கிய பரிசளிப்பு விழாவில் வெளியிடப்படும் "கலை இலக்கிய பூங்கா" மலருக்கு ஆசிச் செய்தி வழங்கி வைப்பதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு சமூகத்தின் அடையாளச் சின்னமாகக் காணப்படும் கலையானது அச்சமூகத்தின் இருப்புக்களையும், ஆற்றல் களையும் எடுத்துச் சொல்லுவதாகவும் தனித்தன்மை வாய்ந்ததாகவும் காணப்படும் அதேவேளை, இலக்கியமானது அது படைக்கப்பட்ட காலத்தினூடாக அவ்வினத்தின் பூர்வீகத்தை எடுத்துக்காட்டும் காலச் சுவடியாகவும் காணப்படுகிறது.

அவ்வாறே தொன்மையான வரலாற்றைக் கொண்ட சாய்ந்தமருதும், கலை இலக்கியத்தில் உன்னத நிலையில் காணப்படும் ஒரு பிரதேசமாகும். இதற்குக் காரணம் இங்குள்ள ஆற்றல் மிக்க கலைஞர்களும் அவர்களின் படைப்புக்கள் மீதான ஆர்வமுமாகும். அந்த ஆற்றலினுடாக இப்பிரதேசத்தை இலங்கைத் தீவிலும், சர்வதேசத்திலும் பேசவைக்கும் கைங்கரியத்தைச் செய்து வரும் இவ்வாறான போட்டி நிகழ்ச்சிகள் கலைஞர்களின் மற்றும் மாணவர்களின் சிறந்த ஆக்கங்களினுடாக இளம் கலைஞர்களையும் ஊக்கப்படுத்துமென்பதில் ஐயமில்லை.

இவ்வாறான ஒரு பணியை பிரதேச செயலகங்கள் தோறும் நடைமுறைப்படுத்தும் முகமாக கலாசார திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தும் இப்போட்டி நிகழ்வானது பாடசாலை மட்டம், திறந்த மட்டம் என இரு வேறு பிரிவுகளாக ஒழுங்கமைத்து சிறந்த ஆக்கங்களைத் தெரிவு செய்து அதற்கான நன்மதிப்பை வழங்கி கௌரவிக்கும் சிறப்பான ஒரு முயற்சியும், நிகழ்வும் ஆகும்.

அந்த வகையில் எமது பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் மற்றும் மாணவர்களின் ஆக்கங்களுக்குப் பரிசளிக்கும் இந்நிகழ்வை சிறப்பாகவும் நேர்த்தியாகவும் ஒழுங்கமைத்துள்ள கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஏ.எச்.ஷபீக்கா, கலாசார அதிகார சபை, கலாசார பிரிவு மற்றும் அனைத்து ஏற்பாட்டாளர்களுக்கும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

**ஐ.எம். றிகாஸ் (SLAS)**

*பிரதேச செயலாளர்*
*சாய்ந்தமருது*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிப் பிரதேச செயலாளரின் ஆசிச் செய்தி

சாய்ந்தமருது பிரதேச செயலகம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நடாத்தும் பிரதேச கலாசார விழா மலரான "கலை இலக்கிய பூங்கா" வெளியீட்டுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் உளம் பூரிக்கின்றேன்.

ஒரு சமூகத்தின் கலை, கலாசாரம், பாரம்பரியம், பண்பாடு, இலக்கியம் என்பன அச்சமூகத்தின் வரலாற்றையும் அதன் இருப்பையும் உறுதிப்படுத்தும் சான்றுகளாகும். இச்சான்றுகளைப் பாதுகாக்கும் கலைஞர்களை வாழ்த்துவதோடு அவர்களின் மூலம் சிறந்த ஆக்கபூர்வமான படைப்புக்கள் வெளியிடப்பட வேண்டுகிறேன்.

இந்நிகழ்வானது வெற்றிபெற பிரார்த்திப்பதோடு இதன் மூலம் இளம் சமூகத்தினரும் கலை இலக்கியத்தில் பிரகாசிக்க ஊக்கப்படுத்தும் என்ற எதிர்பார்ப்புடன் விடைபெறுகிறேன்.

**எம். ஐ. முவ:்.பியா**

*உதவி பிரதேச செயலாளர்*
*சாய்ந்தமருது.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார அதிகார சபையின் உப தலைவரின் செய்தி



சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் கலாசார பிரிவும், கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து ஒழுங்கு செய்துள்ள இலக்கிய பரிசளிப்பு விழா சிறப்புற அமைய, அதனை முன்னிட்டு வெளியிடப்படும் "கலை இலக்கிய பூங்கா" மலரூடாக எனது மனப்பூர்வமான வாழ்த்தினைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு பிரதேசத்தின் வாழ்க்கை முறை, கலாசாரம், பண்பாடு என்று சொல்லப்படுகின்றவையெல்லாம் அப்பிரதேச மக்களின் கலை இலக்கியப் படைப்புக்கள் மூலமாகவே தெளிவாகப் புலப்படுத்தப்படுவது இயல்பு.

அந்த வகையில் சாய்ந்தமருது பிரதேசத்தின் கலை இலக்கியப் படைப்புக்களை வெளிக்கொணருமுகமாக பல போட்டி நிகழ்ச்சிகளை –

பாலர் பிரிவு
சிறுவர் பிரிவு
கனிஷ்ட பிரிவு
சிரேஷ்ட பிரிவு
18 வயதுக்கு மேற்பட்டவர்கள் பிரிவு

என சகலரும் பங்கு கொள்ளத்தக்கதாக ஒழுங்கு செய்து, அவற்றின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட முதல் மூன்று ஆக்கங்களுக்கு சான்றிதழ்களையும் பரிசில்களையும் வழங்கி, இன்றைய 'கொவிட் 19 கொறோனா வைரஸ்' பரவல் சூழ்நிலையிலும் படைப்பாளிகளைக் கௌரவப்படுத்த முன்வந்திருக்கும் இவற்றின் ஒழுங்கமைப்புக்குப் பொறுப்பானவர்கள் உண்மையில் பாராட்டப்படவேண்டியவர்களே!

இந்த இலக்கியப் பணிகள் வருங் காலங்களிலும் தொடர்ந்து, இன்னும் பல புதுமைகளைப் புகுத்தி மேலும் வியாபித்துச் சிறக்க இறைவனைப் பிரார்த்திக்கும் -

***ஏ.எச்.ஏ.பஷீர்***

*ஓய்வுநிலை அதிபர்,*
*சாய்ந்தமருது – 9.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாரை மாவட்ட

# கலாசார உத்தியோகத்தரின் செய்தி



"இலக்கியம்" அனைத்தும் இதயங்களிலும் இறுக இடம்பிடிக்க வேண்டும். கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற பிரதேச கலாசார விழாவின் நிமிர்த்தம் கொரோனா (Covid – 19) பரிசாக வெளிவரும் இவ் இலக்கிய மலரூடாக உரையாட சந்தர்ப்பம் தந்த இறைவனுக்கு முதலில் நன்றி செலுத்தியவனாய் -

கலாசார அலுவல்கள் திணைக்களமானது கருவிலுள்ள சிசுக்களை மையமாகக் கொண்ட "அழகிய குடும்பம்" வேலைத்திட்டத்தில் ஆரம்பித்து மரணித்த கலைஞர் களுக்கான இரங்கல் உரை வரையான நீண்டு விரிந்து ஆழ அகலமான வகையில் தனது வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருவதன் ஒரு அங்கமே பிரதேசத்தில் உள்ள அனைத்து கலைஞர்களையும் உள்ளடக்கிய வருடாந்த கலாசார விழா.

இதன் ஒரு செயற்பாடாகவே பாடசாலைகளில் பாலர் பிரிவு மாணவர்கள் முதல் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து தரப்பினரிடமிருந்தும் ஆக்கங்களைப் பெற்று போட்டிகளை நடாத்தி இறுதியில் அனைத்து கலைஞர்களையும் இணைத்து நடைபெறுகின்ற கலாசார விழா இவ்வருடமும் நடத்துவதில் கொரோனா ஒரு பாரிய சவாலாக உள்ளமையால் வருடாந்த விழாவினை நினைவு கூர்ந்தும், இதற்கான போட்டிகளில் பங்கு பற்றியவர்களை நிர்க்கதிக்குள்ளாக்காத வகையிலும் எதிர்காலத்தில் இவ்விழாக்களை சிறப்பாக நடத்துவதற்குரிய முன்னேற்பாடாகவும் பல பிரயத்தனங்களுக்கு மத்தியில் இம்மலர் வழமைக்கு மாற்றமான முறையில் இவ்வருடம் வெளிவருகிறது.

மலர் வெளியீட்டுடனான விழாக்களை நடாத்துவதற்கு பாரிய நிதி முதலீடுகளுடனான ஏற்பாடுகள் இடம்பெறுவது வழமை. ஆனால் இவ்வருடம் மேற்படி நிலைமைகளைக் கருத்தில் கொண்டு குறுகிய காலப்பகுதிக்குள் திணைக்களத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதிக்குள் கலைஞர்களை ஒன்று கூட்டாமல் போட்டியா ளர்களுக்கான பரிசில்களுடன் சான்றிதழ்களையும் அவரவர் வீடுகளுக்குச் சென்று வழங்குவதாகவும் போட்டிகளில் பங்குபற்றி முதலிடம் பெற்ற ஆக்கங்களையும் பிரதேசத்திற்கு உரித்தான தனித்துவமான கலை இலக்கிய துறைசார் விடயம் தொடர்பான ஆய்வுக்கட்டுரையுடன் இவ்வருடம் திணைக்களத்தினால் மேற்கொள்ளப் படுகின்ற வேலைத்திட்டங்களையும் இணைந்ததாக இம்மலர் வடிவமைப்பதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய இலக்கிய விழாவில் வெளிவருகின்ற இலக்கியம் என்ற நினைவு மலரின் பெயரையே இதற்கு வைப்பதெனவும், மேலதிக மாவட்ட செயலாளர் அவர்களது தலைமையில் நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கேற்ப உத்தியோகத்தர்களால் இது தொடர்பான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டது.

நிதி, கால அவகாசம் மற்றும் Covid 19 போன்ற விடயங்களை கருத்தில் கொண்டு இதில் ஏனைய கலைஞர்களது ஆக்கங்களை இணைத்துக் கொள்ளாததையிட்டு வருத்தமடைகின்றேன்.

இதனோடு இணைந்ததாக கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேலைத் திட்டங்களை மக்கள் மயப்படுத்தும் ஐந்தாண்டு வேலைத்திட்டத்தின் கீழ் எல்லா பிரதேச செயலகங்களிலும் ஒரு கலாசார விளம்பரப் பலகையினையும் ஏற்பாடு செய்யப்படுகிறது. அதாவது கடந்த நான்கு வருடங்களில் திணைக்களத்தினுடாக 11 தலைப்பில் சுமார் 112 வகையான வேலைகள் அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் இது தொடர்பான போதிய தெளிவு கலைஞர்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் காணப்படாமை உணரப்பட்டுள்ளது.

உள்ளும் புறமும் பல்வேறு நெருக்குதல்களுக்கு மத்தியில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் மாவட்ட செயலாளர், மேலதிக மாவட்ட செயலாளர்கள் பிரதேச செயலாளர்களுடன் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களது பங்களிப்பு மகத்தானது.

***ரீ.எம். றின்சான்***

*மாவட்ட கலாசார உத்தியோகத்தர்*
*மாவட்ட செயலகம்*
*அம்பாறை*
2020.11.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளப்பூர்வமான வாழ்த்து

புகழுக்குரிய இறைவனைப் புகழ்ந்து கொண்டு அவனது தூதர் மீது ஸலவாத் கூறியவளாக...



பிரதேச கலை இலக்கிய விழா நடாத்துவதன் நோக்கத்தை நன்கறிந்தவளாக கலைஞர்களின் ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்கும், அவர்களை கௌரவிப்பதன் ஊடாக பிரதேச மக்களின் கலை கலாசார பாரம்பரியங்களை பேணி பாதுகாத்து விருத்தி செய்வதை நோக்காகக் கொண்டு இளைய தலைமுறையினை ஊக்குவிக்கும் முகமாகவும் இவ்வாண்டுக்கான கலை இலக்கிய விழாவில் இம்மலர் வெளியீடு செய்யப்படுகிறது.

ஒரு சமூகத்தின் கலாசாரம், மரபுரிமை, வாழ்வியல் நடத்தைகள் எனும் பலவற்றைக் காலம் கடந்தும், கடத்தி நின்று சான்று பகரும் தன்மை இலக்கியங்களுக்கு உண்டு. அது எழுத்தியலாகவும் இருக்கலாம், வாய் மொழி இலக்கியமகவும் இருக்கலாம். அதனால் தான் "காலத்தை காட்டும் கண்ணாடி" இலக்கியம் என்பர். இவ்வாறான இலக்கியம் சார்ந்த நாட்டார் கவி, கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், சீனடி, சிலம்படி, வாள் வீச்சு, பொல்லடி, றபான் போன்ற பாரம்பரிய கலை வடிவங்கள் கொண்டதாக எமதூர் காணப்படுகின்றது.

அதன் அடிப்படையில் தேசத்தின் நூற்றாண்டுகால வரலாறுகளையும் அதன் போக்குகளையும் இலக்கிய ஆதாரங்களின் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் இக் கால கட்டத்தில் ஏற்பட்ட நிகழ்வுகளின் பிரதிபலிப்புகளின் பதிவுகளை கொண்டதாகவும் இம்மலர் காணப்படுகிறது. அந்த வகையில் உலக நாடுகள் மட்டுமன்றி எமது நாட்டிலும் ஏற்பட்ட கொவிட் 19 வைரஸ், சுய தனிமைப்படுத்தல், ஊரடங்கு போன்ற இக்கட்டான சூழ்நிலைக்கு மத்தியில் பாடசாலை மற்றும் திறந்த மட்ட இலக்கிய போட்டியில் பங்கு பெறச் செய்து அதில் தெரிவு செய்யப்பட்ட முதலாமிட ஆக்கங்கள் பிரசுரிக்கப்படுவதுடன், இப்போட்டியில் தெரிவு செய்யப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டவர்களின் பெயர் பட்டியலும் வெளிவருவதுடன் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேலைத் திட்டங்களும் இடம் பெறுகின்றன.

மேலும் இந்த மலர் வெளியிடுவதற்கு தனது உடல் சுகவீனமற்ற நிலையிலும் ஆய்வுக் கட்டுரைகளை தந்து உதவிய முன்னாள் கிழக்கு மாகாண கலாசார பண்பாட்டு பணிப்பாளர் மருதூர் A. மஜீட் அவர்களுக்கும் மற்றும் இம் மலருக்கு ஆசிச் செய்திகள் வழங்கிய பிரதேச செயலாளர் I.M. றிகாஸ் அவர்களுக்கும், உதவிப் பிரதேச செயலாளர் M.I.முவ.ஃபிக்கா அவர்களுக்கும், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் T.M. றின்ஸான் அவர்களுக்கும், ஆசிச் செய்தியையும் இந்நூலின் எழுத்துப் பிழைகளையும் சரி செய்து நூலுருவாக்கம் செய்ய உதவிய அதிகார சபை உப தலைவரும் ஓய்வுநிலை அதிபருமாகிய A.H.A.பஷீர் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இம்மலர் வெளியீடுவதற்கு உறுதுணையாக இருந்த கலாசார உத்தியோத்தர் M.I.M. அஷ்ரப் மற்றும் சக உத்தியோத்தர்கள் R. சித்தி ஜெஸீரா, U.K.M. றிம்ஸான் அவர்களுக்கும், கலாசார அதிகார சபையின் செயலாளர் K.M.A. அஸீஸ், பொருளாளர் S.M. அஸ்வான் மௌலானா மற்றும் உப செயலாளர் M.I.F..சஜ்னாஸ் அவர்களுக்கும், மாணவர்களை வழிநடாத்தி ஆக்கங்களை அனுப்ப உதவி செய்த சகல பாடசாலை அதிபர்கள், ஆசிரியரகள், மாணவர்கள், கலைஞர்கள் மற்றும் இம்மலரில் உள்ள ஆக்கங்களை தட்டச்சு செய்து உதவிய செல்வி A. பர்ஹத் ஜபீன் மற்றும் அட்டை வடிவமைப்பு செய்த S.M.M. ஷாக்கிர் (ஆசிரியர்) அவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நன்றி.**

***அப்துல் ஹமீட் ஷபீகா***

*கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்*
*கலாசார அலுவல்கள் திணைக்களம்*
*பிரதேச செயலகம், சாய்ந்தமருது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2021-2025 ஐந்தாண்டு உத்தேச வேலைத்திட்டத்தின் கீழ் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினூடாக அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்திட்டங்கள்**

<table>
<tr><th>#</th><th>பிரதான பிரிவுகள்</th><th>#</th><th>வேலைத்திட்டங்கள்</th><th>#</th><th>உப பிரிவுகள்</th></tr>
<tr><td rowspan="3">1</td><td rowspan="3">கலாசார அலுவலகள் அமைச்சினுடைய வேலைத்திட்டங்கள்</td><td>1</td><td colspan="3">அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டி</td></tr>
<tr><td>2</td><td colspan="3">கலாசார மத்திய நிலையங்களுடைய இணைந்த வேலைத்திட்டங்கள்</td></tr>
<tr><td>3</td><td colspan="3">தேசிய கலை இலக்கிய விழா</td></tr>
<tr><td rowspan="18">2</td><td rowspan="18">திணைக்களத்தின் குழுச் செயற்பாடுகள்</td><td rowspan="6">1</td><td rowspan="6">தனியார் கலைமன்றங்களை ஒழுங்கமைத்தல்</td><td>1</td><td>மன்றங்களின் தகவல்கள் :<br>a. பதிவு செய்யப்பட்டவை<br>b. பதிவு செய்யப்படாதவை<br>c. தற்காலிக பதிவு</td></tr>
<tr><td>2</td><td>மன்றங்களை பதிவு செய்தல்</td></tr>
<tr><td>3</td><td>மன்றங்களுகிடையிலான போட்டிகள்</td></tr>
<tr><td>4</td><td>வருடாந்த மதிப்பீடுகளும் தரப்படுத்தலும்(A,B,C,D)</td></tr>
<tr><td>5</td><td>வருடாந்த கொடுப்பனவுகள்</td></tr>
<tr><td>6</td><td>மன்றங்கள் தொடர்பான முறைப்பாடுகள்</td></tr>
<tr><td>2</td><td colspan="3">கலைச் சங்கங்களின் தகவல்கள்</td></tr>
<tr><td rowspan="10">3</td><td rowspan="10">கலைஞர் நலலநோம்பு வேலைத்திட்டங்கள்</td><td>1</td><td>தேசிய கலைஞர் அடையால அட்டை</td></tr>
<tr><td>2</td><td>தேசிய தரவுத் தளம்</td></tr>
<tr><td>3</td><td>சுபதம்</td></tr>
<tr><td>4</td><td>உதவி அ/க வருடாந்த கொடுப்பனவு</td></tr>
<tr><td>5</td><td>மருத்துவ கொடுப்பனவுகள்</td></tr>
<tr><td>6</td><td>ஓய்வூதியம் (60- 70)</td></tr>
<tr><td>7</td><td>சேமநலன் விசாரித்தல்</td></tr>
<tr><td>8</td><td>வருடாந்த ஒன்று கூடல்</td></tr>
<tr><td>9</td><td>கலைக்கிராமம்</td></tr>
<tr><td>10</td><td>மரண உபகாரம்</td></tr>
<tr><td>4</td><td colspan="3">பிரதேச கலாசார அதிகார சபைகள்</td></tr>
</table>



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | கூட்டங்கள் | 1 | பிரதேச மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் | | |
| | | 2 | மாவட்ட காலாண்டு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் | | |
| | | 3 | ஏனையவை | | |
| 4 | திட்ட வரைபுகள் | 1 | திட்ட முன்மொழிவு (Proposal) | | |
| | | 2 | மாதாந்த முன்வேலைத் திட்டம் (Advance Programme) | | |
| | | 3 | வேலை நிறைவேற்று இறிக்கை / தினக்குறிப்பு (Dairy Extract) | | |
| 5 | திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற 15 அரச விழாக்களுக்கான தயார்படுத்தல்கள் | 1 | தேசிய இலக்கிய விழா | 1 | பிரதேச இலக்கிய விழா |
| | | | | 2 | மாவட்ட இலக்கிய விழா |
| | | | | 3 | தேசிய இலக்கிய விழா |
| | | | | 4 | தேசிய கையெழுத்துப் பிரதிப் போட்டி |
| | | 2 | அரச ஸாஹித்திய விருது விழா | 1 | ஸாஹித்திய விருது |
| | | | | 2 | நூல் கொடுப்பனவு |
| | | | | 3 | வெளியீடு |
| | | 3 | அரச சிறுவர் ஓவிய விழா | | |
| | | 4 | அரச சிறுவர் ஓவிய மற்றும் சிற்ப விழா | | |
| | | 5 | அரச புகைப்பட விருது விழா | | |
| | | 6 | அரச நாடக விழா | 1 | குறு நாடக விழா |
| | | | | 2 | நெடு நாடக விழா |
| | | 7 | அரச சிறுவர் நாடக விழா | 1 | சிறுவர் நாடக விழா |
| | | | | 2 | நாடகப் பிரதியாக்கப் போட்டி |
| | | 8 | அரச நடன விழா | | |
| | | 9 | அரச இசை விருது விழா | | |
| | | 10 | அரச வானொலி விருது விழா | | |
| | | 11 | அரச தொலைக்காட்சி விருது விழா | | |
| | | 12 | உலக பொம்மலாட்ட விழா | | |
| | | 13 | விஷேட தேவையுடையோர் தொடர்பிலான கலை விழா | | |
| | | 14 | கலாபூஷண விருது விழா | | |
| | | 15 | அரச குறுந் திரைப்பட விழா | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | தொலஸ் மகே பஹன வேலைத்திட்டம் | 1 | January - சிறுவர் அழகியல் கலாசார கழகங்களை ஆரம்பித்தல், கிராமிய விளையாட்டு, சர்வமதம் | 7 | July - கிராமிய மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்கள் தொடர்பான வேலைத்திட்டம் |
| | | 2 | February - சுதந்திர தினத்தோடு தொடர்புடைய வேலைத்திட்டம் (அறநெறி, மக்தப்,அஹதியா) | 8 | August - நீல வானம் வசந்த திரு விழா - பட்டம் |
| | | 3 | March - பிராந்திய அடையாள திட்டம்- உள்ளூர் கலாசார வரைபடங்களை உருவாக்கல் | 9 | September - இலக்கிய மாதம் - கலாசார விழா |
| | | 4 | April - புத்தாண்டு விழா, நாட்டுப்புற விளையாட்டு விழா | 10 | October - பாடசாலை மாணவர்களுக்கான வாசிப்புடன் கூடிய வேலைத்திட்டம் |
| | | 5 | May - வெசாக், வைகாசிப் பொங்கள், ரமழான் சிறப்புப் போட்டி நிகழ்ச்சிகள் | 11 | November - பாரம்பரியத்தைத் தேடி - ஆவணப்படங்களை உருவாக்குதல் |
| | | 6 | Jun - பாரம்பரிய உணவு | 12 | December - கலைதான் கச்சேரி - உள்ளூர் நடனம் இசைக் குழக்களை நிறுவுதல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | விஷேட தினங்கள் தொடர்பான கலை நிகழ்வுகள் | 1 | புது வருட சர்வ மத வேலைத்திட்டம் Januvary - 01 | 2 | தேசிய தினம் February - 04 |
| | | 3 | மகா சிவராத்திரி தினம் February - 21 | 4 | சர்வதேச மகளிர் தினம் March - 18 |
| | | 5 | உலக கவிதை தின விழா March - 21 | 6 | உலக சிறுவர் நூல் நாள் April - 02 |
| | | 7 | உலக புத்தக தினம் April - 23 | 8 | அனைத்துலக அருங்காட்சியக நாள் May - 18 |
| | | 9 | உலக கலாசார முன்னேற்ற நாள் May - 21 | 10 | பொசோன் முழு நோன்மதி தினம் June - 05 |
| | | 11 | சர்வதேச எழுத்தறிவு நாள் Sep - 08 | | |
| | | 12 | October தேசிய வாசிப்பு மாத வேலைத்திட்டங்கள் | 13 | சர்வதேச சிறுவர் தினம் October - 01 |
| 8 | பாரம்பரிய கலைகள் தொடர்பான விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் | 1 | கூத்து | 11 | களிகம்பு |
| | | 2 | கரகம் | 12 | கஸீதா |
| | | 3 | காவடி | 13 | நாட்டாரியல் |
| | | 4 | கும்மி | 14 | அரபு எழுத்தணிக்கலை |
| | | 5 | கோலாட்டம் | 15 | றபான் பைத் |
| | | 6 | சிலம்பாட்டம் | 16 | சூபி நடனம் |
| | | 7 | பரதம் | 17 | மெஹன்தி - மருதானி |
| | | 8 | தற்காப்புக்கலை | 18 | குறவை |
| | | 9 | மெஜிக் | 19 | வாத்தியக்கருவிப் பயன்பாடு |
| | | 10 | தளபாடப் பூ வேலைகள் தயாரிப்பு | 20 | சித்திரைப் புத்தாண்டு விழா |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | விஷேட விழாக்கள் தொடர்பான கலை நிகழ்வுகள் | 1 | தைப் பொங்கள் விழா | 5 | சித்திரைப் புத்தாண்டு விழா |
| | | 2 | பெரிய வெள்ளி விழா | 6 | ரமழான் மற்றும் ஹஜ் பண்டிகை விழா |
| | | 3 | வாணி விழா | 7 | மீலாதுன் நபி விழா |
| | | 4 | தீபாவெளிப் பண்டிகை விழா | | |
| 10 | வருடாந்த கௌரவிப்புக்கள் | 1 | அரச விருதுகள் | 1 | ஸாஹித்திய றத்னா |
| | | | | 2 | ஸாஹித்தியம் |
| | | | | 3 | கலாபூஷணம் |
| | | | | 4 | அரச இலக்கிய விருது |
| | | | | 5 | வித்தகர் |
| | | | | 6 | இளம் கலைஞர் |
| | | 2 | அரச சார்பற்ற விருதுகள் | | |
| 11 | பாரம்பரியம் | 1 | பாரம்பரிய உணவு, விளையாட்டு, சடங்கு சம்பிரதாய முறைகளைப் பாதுகாத்தல் | 3 | ஓலைச் சுவடிகள் |
| | | 2 | பாரம்பரிய விளையாட்டுக்கள் | 4 | பாரம்பரிய வைத்திய முறை |

மேற்படி 11 வகையான வேலைத்திட்டங்கள் தொடர்பான "சொற்பொழிவுகள், பயிற்சிப் பட்டறைகள், விவாத அரங்குகள், போட்டிகள், விற்பனைக் கூடங்கள் , கண்காட்சிகள், மேடை ஏற்றல் ஏற்பாடுகள்" என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.

**தொகுப்பு:**


***T. M. றின்ஸான்***

*மாவட்ட கலாசார உத்தியோகத்தர்*
*மாவட்ட செயலகம்*
*அம்பாறை*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் கிழக்கு முஸ்லிம் தேசத்தினரின் பொல்லடி எனும் நிகழ்த்தல் கலை





தென் கிழக்கு முஸ்லிம்களின் பூர்வீக கலை, கலாசார நிகழ்வுகளில் குரவை, ஆராத்தி, மருதோன்றி, சீனடி, சிலம்படி, பொல்லடி, ரபானிசை, பதம்பாடுதல், மாப்பிள்ளை வாழ்த்து என்பவற்றை குறிப்பிட முடியும். இவற்றுள் சிலம்படி, பொல்லடி என்பன தடிகளை கொண்டு செய்யப்படும் நிகழ்த்தல் கலைகளாகும். இவை இரண்டும் தடிகளை கொண்டு செய்யப்படும் நிகழ்த்தல் கலைகளாக இருந்தும் வேறுபட்ட தன்மைகளைக் கொண்டதாகும். உதாரணமாக இரண்டிற்கும் வேறு வேறான ஒழுங்கமைப்புக்கள் உண்டு. பொல்லடி 18 அடிகளைக் கொண்ட அமைப்புக்களோடு ஒழுங்கமைக்கப்பட்டு பூர்வீக வரலாறு கொண்டதை நாம்அவதானிக்கலாம்.

இதே போன்றுதான், சிலம்படியும் வேறு வேறான பூர்வீக ஒழுங்கமைப்பை உடையது.

இனி பொல்லடியை மட்டும் இங்கு எடுத்து நோக்குவோம். இந்த பொல்லடி மூன்று வகையாக அழைக்கப்பட்டாலும் அதாவது: பொல்லடி, கழிகம்பாட்டம், கோலாட்டம் என அழைக்கப்பட்டாலும் தென் கிழக்கு முஸ்லிம்கள் மத்தியிலே பொல்லடி என்றே அழைக்கப்படுகிறது.

இந்த பொல்லடியினுடைய பூர்வீக வரலாறு ஆய்வாளர்கள் மத்தியில் வேறு வேறான கருத்தினைக் கொண்டதாக இருப்பதனையும் இங்கு கூறாமல் இருக்க முடியாது.

உதாரணமாக இந்த பொல்லடியின் பூர்வீகம் இந்தோனேசியா, மலேசியா எனவும், வேறு சில ஆய்வாளர்களிடையே இந்தியாவின் குஜராத் பிரதேசம் எனவும், வேறு சில ஆய்வாளர்களிடையே கேரளா எனவும் அறிய முடிகிறது. ஆனால், மேற்குறிப்பிட்ட கருத்துக்களில் இந்த பொல்லடியின் பூர்வீகம் கேரளா என்பதற்கான ஆதாரங்கள் ஏராளம் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் கிழக்கு முஸ்லீம்களின் பூர்வீகம் கேரளா என்பதும் இதற்கான சான்றுகளில் ஒன்றாக கொள்ள முடியும். உதாரணமாக தென் கிழக்கு முஸ்லிம்களின் உணவுக் கலாசாரம் கேரளா கலாசாரதோடு ஒட்டி உறவாடுவதை இங்கு நாம் எடுத்துக்காட்டலாம். உதாரணமாக "ஊண் உறக்கமின்றி வாடிக் கிடக்கிறன்" என்ற வசனத்திலே உள்ள ஊண் என்ற சொல் கேரளா மொழிச் சொல்லாகும். இதே போல் ஆணம், கறி போன்ற சொற்களையும் கூற முடியும். இதே போல் பேச்சு வழக்கிலும் பல கேரளா மொழிச் சொற்களை தென் கிழக்கு முஸ்லிம்கள் பாவிப்பதை அவதானிக்க முடியும். உதாரணமாக தொழுகைக்காக அழைப்பு விடுப்பதை பாங்கு சொல்லியாச்சா என நாம் அழைப்பதில்லை. பாங்கு பறிஞ்சதா என்றே கேட்போம் "பறிஞ்ச" என்பது மலயாளச் சொல்லாகும். இதே போன்ற ஏராளமான மலயாளச் சொற்கள் எமது பேச்சில் உள்ளதை எடுத்துக் கூற முடியும். விரிவஞ்சி இனி விடயத்துக்கு வருவோம்.

பொல்லடி எகிப்தில் இருந்து வந்திருக்கலாம் என்பது ஒரு ஊகம். எகிப்திய பிரமிட்டுக்களில் பொல்லடிக் காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

தென் கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் பிரபலம் பெற்ற ஒரு கலையாக இது விளங்குகிறது. இன்று அருகி, ஒரு சில கிராமங்களில் மட்டும் கல்யாணத்தின் போதும் சுன்னத்து சடங்கின் போதும் விஷேட தினங்களிலும் வரவேற்பு வைபவங்களிலும் இடம் பெறுகின்றது.

தென் கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் உள்ள பொல்லடி இங்கு வாழும் திராவிடர்கள் மத்தியில் உள்ள கோலாட்டம் போன்றதல்ல.

கோலாட்டம் வேறு பொல்லடி வேறு, முஸ்லிம்கள் மத்தியில் உள்ள பொல்லடி பல நுட்பங்களைக் கொண்டது. பாட்டும் பாட்டிற்கேற்ற தாளமும் கொண்டு ஆண்கள் மட்டும் அடிப்பது இப்பொல்லடியாகும். இதில் 18 வகையுண்டு.

இதனை ஒரு ஊடகமாகப் பாவித்து அக்காலத்தில் முஸ்லிம்களுக்கே சொந்தமான "அப்பாஸ் நாடகம்", "அலிபாதுஷா நாடகம்", "தையார் சுல்தான் நாடகம்" போன்ற நாடகங்களை இசைப்பாட்டாக்கி பொல்லடி ஊடகத்தினுடாக திறந்த வெளியில் மேடையமைத்து பாத்திரங்களுக்கேற்ற உடையணிந்து பல மணித்தியாலங்கள் தொடராக மிக கவர்ச்சியாக செய்து காட்டுவர். எனதூரில் "அலிபாதுஷா" நாடகத்தை பொல்லடியினை ஊடகமாக பாவித்து செய்தார்கள்.

அதே போன்ற ஒரு பொல்லடி கவர்ச்சியான நிகழ்ச்சியினை அதன்பிறகு எனதூரில் நான் பார்க்கவே இல்லை. அதில் பங்கேற்றவர்கள் எல்லோரும் இறந்து விட்டார்கள். அண்ணாவியார் கூட இறந்து பல வருடங்களாகிவிட்டன. பொல்லடிக் குழுவில் பெரும்பாலும் 18 பேர் அங்கம் வகிப்பர். சில இடங்களில் 12 பேராகவும் இது 24 ஆக அதிகரிப்பதும் உண்டு. பொல்லடிக்கும் கம்பு, தடிகள் காட்டு இனமான விப்பனை எனும் காட்டு மரத்தில் இருந்து வெட்டி எடுக்கபட்ட இனத்தை சேர்ந்ததாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இனக் கம்புகள் நீண்ட காலம் பாவிக்ககூடியது. பொல்லுகள் சாயம் பூசப்பட்டிருக்கும். பொல்லின் நீளம் 15 அங்குலமாகும். பொல்லின் கீழ்முனையில் வெண்டயம் எனும் சதங்கை இணைக்கப்பட்டிருக்கும். பொல்லடிக்கும்போது வெண்டயத்தின் சத்தமும் சேர்ந்து கேட்பதற்கு ரம்மியமான சத்தமாக இருக்கும்.

பொல்லடியில் உள்ள பதினெட்டு வகையில் தண்ணால், கீச்சான் போர், தரித்தடித்தல், பள்ளியீட்டு, நாலு வீட்டுக்குச் செல்லுதல், தேன்கூடு, மான்வளையம், ஒற்றை மல்லி, இரட்டை மல்லி, திருமல்லி, ஐந்து வெட்டு, நாலடி, ஒன்பதடி, கயிற்றுப்பொல் என்பன சிலவாகும். திராவிடர் மத்தியில் உள்ள கோலாட்டம் பெண்களும் சிறுவர்களும் ஆடுவார்கள். முஸ்லிம்கள் மத்தியில் உள்ள பொல்லடி ஆண்கள் மிக வேகமாக ஆடும் ஒரு ஆட்டக்கலையாகும். சிலவேளை சிறுவர்களையும் பழக்கி இலகுவான ஆட்டங்களை ஆடச்செய்வர்.

அந்த வகையில் எமதூரான சாய்ந்தமருதூரில் வாழும் மக்கள் எவ்வாறு நீண்ட கால சரித்திரத்தை கொண்டவர்களாக இருக்கின்றார்களோ அதே போல் நீண்ட கால கலை கலாசார இலக்கியப் பாரம்பரியங்களையும் கொண்டவர்களாகவும் உள்ளனர். தென் கிழக்கு முஸ்லிம்களின் ஆரம்ப ஊர் என்ற மருதூரில் இருந்து அக்கரை ஊரான அக்கரைபற்றுக்கு போயிருக்க வேண்டும். அங்கு இருந்துதான் வரப்பத்தான்சேனை, இறக்காமம் பரவி இருக்கலாம். தென் கிழக்கு முஸ்லிம்களிடமிருந்துதான் தேசத்தின் எல்லா இடங்களுக்கும் போயிருக்க வேண்டும் என்பது ஆதாரபூர்வமான உண்மையாகும். இதனால் தான் அண்ணாவிமார்கள் ஆரம்பகாலங்களில் இங்கு தோன்றி இருக்கிறார்கள்.


**ஆக்கம்:**

***மணிப்புலவர் மருதூர் A. மஜீத்***


*ஓய்வு பெற்ற - முஸ்லிம் கலாசார அமைச்சின் பணிப்பாளர்.*

*வடக்கு, கிழக்கு மாகாணம்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாவும்
# நவீன யுகமும்



**"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"** என்பார்கள். செல்வம் பல வகைப்படும்.

அதில் நோயற்ற வாழ்வும் ஒரு வகையான செல்வமாகும். ஆகவே நாம் நோயற்று இருந்தால் செல்வமாக வாழலாம். நோயற்று இருப்பதற்கான காரணம் என்ன என்பதை நாம் கண்டுபிடித்தல் வேண்டும். முதலில், நோய் பல வகைப்படும். தொற்று நோய் , தொற்றா நோய் என இன்னும் பல நோய்கள் உள்ளன. உலகத்தை பல ஆண்டு காலங்களாக நோய்கள் தாக்கி வருகின்றன. இந்நோய்களால் பலர் பாதிக்கப்பட்டு இறந்துள்ளனர். உதாரணமாக மலேரியா என்ற நோய் இலங்கையில் பல அழிவுகளை கொடுத்துள்ளது. அதே போன்று இந்த கோவிட்-19 வைரஸும் உலகையே ஆட்டிப் படைக்கிறது.

இந்த கொரோனா வைரஸ் சீனாவில் வுஹான் மாநிலத்தில் இருந்து கிளம்பி தற்போது உலகையே கூண்டினுள் அடைத்துள்ளது. இதனால் உலகமெங்கும் பதற்றம் நிலவி வருகிறது. இதற்கு முன் அதாவது 2002 முதல் 2003 வரையிலான காலகட்டத்தில் சீனாவை தாக்கிய "சார்ஸ்" எனும் வைரஸால் நூற்றுக் கணக்கானோர் உயிரிழந்தனர். உண்மையில் இந்த சார்ஸ் என்பது ஒருவகை கொரோனா வைரஸ்தான்.

கொரோனா என்பது ஒருவகை வைரஸ் குடும்பம். அதில் சார்ஸ் வகை கொரோனா வைரஸ் 2003 ஆம் ஆண்டும் அதைத் தொடர்ந்து 2004, 2005, 2012 உள்ளிட்ட ஆண்டுகளில் வேறுபட்ட கொரோனா வைரஸ்களும் கண்டறியப்பட்டன. இந்நிலையில் தற்போது சீனாவை மையமாகக்கொண்டு உலகை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸுக்கு நோவல் கொரோனா வைரஸ் என்று பெயர்.

கி.மு. 8600 ஆம் ஆண்டிலும் இந்த கொரோனா வைரஸ் மிருகங்களை தாக்கியதாக குறிப்பிடபடுகின்றது. ஆனால் மனிதர்கள் 1960 ஆம் ஆண்டில் தான் இந்த கொரோனா வைரஸை கண்டுபிடித்துள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வைரஸுக்கு கொரோனா என்று பெயர் வந்ததற் கான காரணம் இதன் வடிவம் அரச கீரிடம் போன்றும் சூரியன் போன்றும் ஒளி வட்டமாய் இருப்பதாலும் இலத்தீனில் இதற்கு கொரோனா என்று பெயர்.

இந்த கொரோனா வைரஸ் தாக்கத்தால் உலகம் முழுவதும் இதுவரை 80 லட்சத்துக்கு மேற்பட்டோர் இறந்துள்ளதாகவும் சுமார் 23 இலட்சம் பேருக்கு மேல் பாதிப்புக்கு உள்ளாகியதாகவும் 216 நாடுகள் இத்தொற்று நோயை எதிர்கொண்டு வருவதாகவும் 16,000,000 க்கும் மேற்பட்டோர் குணமடைந்துள்ளதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிகின்றது. மேலும் உலக நாடுகள் அனைத்தும் பாரிய பொருளாதார வீழ்ச்சியை எதிர் நோக்குகின்றமையை காணக்கூடியதாக உள்ளது.

எமது நாட்டை எடுத்துக்கொண்டமேயானால் இதுவரை 2500க்கும் மேற்பட்டோர் தொற்றுக்குள்ளாகியதாகவும் 12 பேர் இறந்துள்ளதாகவும் அதிகமானோர் குணமடைந் துள்ளதாகவும் இது குறித்த தகவல்கள் தெரிவிகின்றன.

இதைத் தொடர்ந்து எமது அயல் நாடான இந்தியாவில் கூட இது பற்றிய விழிப்புணர்வு போதியளவு இல்லாமல் போனமையினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 30 லட்சத்தையும் கடந்துள்ளது. இத்தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றமையை காணக்கூடிய தாகவுள்ளது. அதே போன்று வல்லரசு, நவீனத்துவம், நாகரிகம் என்று மார்பு தட்டிக்கொண்டிருக்கும் வல்லரசான ஐக்கிய அமெரிக்காவில் இறப்பு வீதமும் , தொற்றுக்குள்ளானவர்களின் வீதமும் மற்றைய நாடுகளை விட அதிகரித்த வண்ணம் காணப்படுகிறது. இதற்கான காரணம் என்ன என்பது புரியாத புதிராகவே காணப்படுகிறது. ஐக்கிய அமெரிக்காவில் பாதிக்கப்பட் டோரின் எண்ணிக்கை 58 லட்சம் வரையில் அதிகரித்த வண்ணம் உள்ளது.

அனைத்து நாடுகளுமே இதை எதிர்கொண்டு வருவதால் இது பற்றிய விழிப்புணர்வு அனைவருக்கும் அவசியமாக தேவைப்படுகிறது. இந்நோய் ஒரு தொற்று நோய் என்ற காரணத்தினால் இந்நோயால் பாதிக்கப்பட்ட நபரின் இருமல், தும்மல் அல்லது நாம் அந்த நபரை தொடுவதன் மூலமும் பரவும் தன்மை கொண்டது.

ஆகவே நாம் வெளியில் செல்லும்போது முகக்கவசம் அணிந்து செல்லுதல், சளி, இருமல், காய்ச்சல் உள்ள எவருடனும் பக்கத்தில் இருப்பதை தவிர்த்துக் கொள்ளுதல் அல்லது குறைந்தது ஒரு மீற்றர் இடைவெளியை பேணுதல் வெளியில் இருந்து வீட்டிற்கு திரும்பிய பின் எமது கைகளை சவர்க்காரம் அல்லது செனிடைசர் என்பவற்றை பயன்படுத்தி 20-40 செக்கன்களுக்கு கழுவுதல் போன்ற நடைமுறைகளை இச்சந்தர்ப்பத்தில் கடைப்பிடிப்பது மிகவும் அவசியமான ஒரு விடயமாகும்.

இவை அனைத்தும் பொதுவாக நாம் அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்களாகும். ஆனால் நாம் அவற்றை கடைபிடிப்பதில்லை. அது மட்டுமன்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதங்களும் இதைப்பற்றிய பல விடயங்களை குறிப்பிட்டி ருக்கிறன. அதாவது நாம் மத விழுமியங்களுக்கேற்ப நடந்து கொண்டால் எந்த நோயும் எம்மை தாக்காது. மத ஒழுக்க விழுமியங்களை விட்டு மனிதன் எவ்வாறு நெறி தவறிப்போகிறானோ அவ்வாறே அவன் பல கொடூரமான நோய்களை சந்திக்க நேரிடும்.

மனிதனை மனித அழிவிலிருந்து விஞ்ஞானமோ அல்லது விஞ்ஞானிகளோ காப்பாற்ற முடியாது. சர்வ மதங்கள் அனைத்தும் ஒழுக்க நெறிகளை போதிக்கிறது. எனவே ஒழுக்க நெறிகளை பின்பற்றி மனிதன் நடப்பானாயின் மனித அழிவை தடுக்க முடியும்

எமக்கு மார்க்கமும் சமூகவியலும் பல விடயங்களை கற்றுத் தந்துள்ளன. ஆகவே நாம் இதனை அறிந்து நடக்க வேண்டும். அதுமட்டுமன்றி சுகாதார ஸ்தாபனங்களும் எமக்கு பல விடயங்களை கூறியிருக் கின்றன. இதையெல்லாம் பின்பற்றியதனால்தான் இலங்கை இந்த தொற்று நோயிலிருந்து காப்பாற்றப் பட்டுள்ளது. எமது அயல் நாடான இந்தியா ஏராளமாக தாக்கப்பட்டுள்ளது. சுத்தம் , சுகாதாரம் என்பவற்றை பின்பற்றாமையே இதற்கு காரணமாகும். ஆகவே சுத்தம் , சுகாதாரம் என்பவற்றை கடைபிடித்து கொரோனா தொற்றிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்வோம்.

**ஆக்கம்:**

***முஹம்மட் றிஸ்மி சீனத் ஸிம்ஹா***

*(கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி)*

*397, பழைய சந்தை வீதி, சாய்ந்தமருது.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெளிவு

(நாடகம்)

**காட்சி – 01**

**தொகுத்து வழங்குபவர்:** ரவியின் வீட்டில் ஒரு காலைப் பொழுது.( ரவியின் தந்தை, ரவியின் தாய் , ரவி, ரவியின் பாட்டி)

(ரவியின் தந்தை room ல் இருந்து வெளியாதல், ரவியின் தாய் ரவிக்கு சாப்பாடு வழங்குதல் , ரவி School செல்ல பையை தயார் செய்தல்).

**ரவியின் தந்தை:** ரவி!.... மகன் Ready ஆகிட்டிங்களா. நேரம் போகுது எனக்கு கொஞ்சம் Office ல வேலை இருக்கு நேரத்தோட போகணும் வாரிங்கலா?

**ரவியின் தாய்:** ஆ இந்த மகன் சாப்பிடுறாரு வரட்டும் கொஞ்சம் இருங்களன். மகன் இத கொஞ்சம் பிடிங்க அடுப்புல பால் இருக்கு நான் பார்த்துட்டு வாரன். (சாப்பாடை மகனிடம் வழங்கல்).

**ரவியின் பாட்டி:** நீங்க இருங்க நான் போய் பாக்கன். (பால் தவறிவிழல்)

**ரவியின் தாய்:** என்ன சத்தம். ஏன் மாமி உங்களுக்கு இந்த வேலை நான் வந்திருப்பன்தானே. இப்ப பிள்ளைக்கு என்னத்த கொடுக்குற?

**ரவியின் தந்தை:** என்ன? என்ன நடந்த. (பாலை பார்த்தல்) சரி விடுங்க பால்த்தானே.

**ரவி:** இப்பதான் நிம்மதி பாட்டி. நல்ல வேலை ஒன்று செய்திருக்கிங்க. எப்படிடா இதயும் குடிக்கிறன்டு யோசிச்சன். இப்ப அந்த தொல்ல இல்ல.

**ரவியின் பாட்டி:** சரி நான் இத Clear ஆக்குறன் நீங்க போய் பிள்ளைய School கு அனுப்புங்க.

**ரவியின் தாய்:** இல்ல நானே வாரன். நீங்க அந்தா சாப்பாடு இருக்கு சாப்பிடுங்க. ரவி நீங்க வாங்க சாப்பிட.

**ரவி:** என்ன மறுபடியுமா? எனக்கு போதும்.

**ரவியின் தந்தை:** அவர விடுங்க வாங்க School போவம்.

**ரவி:** சரி. இந்தா வாரனப்பா. சரி School போப்பரன் காசு தாங்க எல்லாரும். (பாட்டி பணம் கொடுத்தல்) சரி நான் போய் வாரன்.

**காட்சி – 02**

**தொகுத்து வழங்குபவர்:** ஒரு சில மாதங்களின் பின்னர் சரத்தின் வீட்டில் ஒரு மாலைப் பொழுது. (சரத்தின் தந்தை, சரத்தின் தாய், சரத், ரவியின் பாட்டி, சரத்தின் அக்கா மாலா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சரத்தின் தந்தை வீட்டிற்குள் நுழைதல் , சரத்தும் அக்காவும் பாடசாலைவிட்டு வருதல். ரவியின் பாட்டியும் சரத்தின் தாயும் கதைத்துக் கொண்டிருத்தல்.)

**சரத்தின் தந்தை:** (ஆடிய நிலையில்) "சுத்துதே சுத்துதே பூமி போதுமடா போதுமடா சாமி..." ஆமா எங்க என்ட வீட்ட காணம் யாரு என்ட வீட்ட கொண்டு போன? ஏய் வீடு வருவியா? வரமாட்டியா? "வருவிய்யா... வரமாட்டிய்யா...."

**சரத்தின் தாய்:** இருங்க கொஞ்சம் யாரோ சத்தம் போட்டுக் கிடக்கு. இந்த மனிசன் தானோ தெரியா பார்த்துட்டு வாரன்.

**ரவியின் பாட்டி:** ஆ.. சரி போய் பாருங்க.

**சரத்தின் தாய்:** (கணவனின் கையைப் பிடித்து) வாங்க போவம். எங்க போரீங்க.

**சரத்தின் தந்தை:** ஏய், கைய விடு. (திரும்பிப் பார்த்தல்) ஓ.. என்ட புஷ்பமா? எங்க புஷ்பம் நம்ட வீட்ட காணம் எங்க போயிட்டு.

**சரத்தின் தாய்:** எத்தன நாளைக்குத்தான் சொல்ற குடிக்காத குடிக்காதன்டு. போட்டா ஒன்றும் விளங்கு தில்லை. வீட்டையும் யாரும் தூக்குவாங்கலா?

**சரத்தின் தந்தை:** அதுவும் சரிதான் வீட்டையும் யாரும் தூக்கமாட்டாக என்னையும் மாத்த மாட்டாக. வா புஷ்பம் நம்ம வீட்ட போவம். (வீட்டினுள் செல்லல். மாலா சரத் இருவரும் வருதல்)

**மாலா:** இன்டைக்கும் இப்படித்தானா? நீங்க எல்லாம் எப்பான் திருந்தப் போறிங்களோ தெரியா road ல தலை காட்ட முடியுதுல. இன்னாருடை மகளா? நேத்து இங்க கண்டன் இங்க கண்டன் இப்படி கண்டன் இப்படி கண்டன் இதுதான் கதையா இருக்கு.

**சரத்:** ஓம் அம்மா இன்றைக்கு என்ட Friend உம் சொன்னான் அப்பாவ சொல்லிச் சொல்லி.. (அழுதல்)

**சரத்தின் தந்தை:** யாருடா மகனே அந்த Friend டு நீ சொல்லு மகன் சனம் யாரு என்று.

**சரத்தின் தாய்:** ஏன் யாரும் சொல்லணுமா? இந்த அசிங்கம் தான் ஊரெல்லாம் தெரியுமே.

**ரவியின் பாட்டி:** நீங்க எல்லோரும் இப்படியே கதைச்சிட்டிருந்தா கதைதான் வளரும். அங்க ஒன்றும் நடக்கமாட்டா. அவர் அவர் விளங்கி தன்ட தப்ப உணர்ந்தா மட்டும் தான் திருந்துவாங்க. போய் ஆக வேண்டிய வேலையப் பாருங்க. மகன் தேடுவாரு. நான் வாரன்.

## *காட்சி - 03*

**தொகுத்து வழங்குபவர்:** ஓரிரு வருடங்களின் பின் ரவியின் வீட்டில் ஒரு நிகழ்வு (ரவியின் தாய் , ரவியின் பாட்டி , ரவியின் தந்தை)

**ரவியின் பாட்டி:** மகள் கொஞ்சம் இங்க வாங்கலன். தண்ணீ தாங்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ரவியின் தாய்:** ஆ இந்தா எடுத்துட்டு வாரன் கொஞ்சம் இருங்க. ( கழுவிய ஆடையை வைத்துவிட்டு செல்லுதல்) (நீர் கொடுத்தல்) (ரவியின் தந்தை வீட்டிற்குள் வருதல்).

**ரவியின் தந்தை:** ரவி... ரவி..! எங்க ஒருவரையும் காணம்.

**ரவியின் தாய்:** நான் இந்தா இருக்கன். அவரு Class கு போயிருக்காரு. வாங்க சரியான தலை வலியா இருக்கு.

**ரவியின் தந்தை:** ஏன்? என்ன செய்த.

**ரவியின் தாய்:** என்ன இப்ப எனக்கு இந்த வீட்டில வேலையெல்லாம் கூடிட்டே. நான் எல்லாம் செய்யணும் எல்லாரையும் பாக்கணும்டா என்ன செய்ற.

**ரவியின் தந்தை:** மறுவா வேற யாரு செய்ற இதெல்லாம்? வேலைக்கா ஆள்வைக்குற.

**ரவியின் தாய்:** அதுக்காக? சரி, அத விட்டுட்டு நான் காலையில சொன்னலா என்ன விசாரிச்சுப் பாத்திங்கலா?

**ரவியின் தந்தை:** என்னத்த?

**ரவியின் தாய்:** அதுதான் ஆசரமம் பத்தி....

**ரவியின் தந்தை:** உனக்கென்ன பைத்தியமா புடிச்சிருக்கு? உன்னால கொஞ்சம் அம்மாவ பாக்க இயலாதா? உனக்குத்தானே அம்மா இருக்குறது நல்லம் ஒரு துணைமாறி இருக்கும் தானே.

**ரவியின் பாட்டி:** மகன்! இங்க கொஞ்சம் வாங்க. (மகன் செல்லல்) சொல்றது சரிதான் நானும் பாத்துட்டுதான் வாரன் என்னால உங்களுக்குள்ள ஒரய சண்டதான் வருது. நான் ஆசரமத்துக்கே போறன். அங்கு எனக்கு ஒரு குறையும் இருக்காதுதானே? நீங்க அடிக்கடி வந்து நேரம் கிடைச்சாப் பார்த்துட்டுப் போகலாமே.

**ரவியின் தந்தை:** அவதான் அப்படின்டா நீங்களும் இந்தக் கதைய விட்டுட்டு சும்மா இருங்க.

## காட்சி - 4

**தொகுத்து வழங்குபவர்:** ரவியை கடைத்தெருவில் ஒரு சில ஆண்டுகளின் பின் சந்தித்தல் (சரத், ரவி, கடைக்காரி, ரவியின் தாய்) (ரவி சரத்தைக் கண்டு கையை மறைத்தல்)

**சரத்:** என்ன ரவி இந்த பக்கம் என்ன செய்றிங்க அதென்ன கைல.

**ரவி:** அதுவா சும்மா கடைக்கு வந்த அதான்.

**சரத்:** இது சரில்ல ரவி இப்படி நீங்க செய்யப்போடா உங்கள எவ்வளவு நம்பிருக்காக உங்கட Parent ஆனா நீங்க இந்த கடையில உங்கட வாழ்கையை அழிக்காதிங்க.

**கடைக்காரி:** இங்கபாரு பெரிய உத்தமருட மகன் வந்துட்டாரு உபதேசம் சொல்ல அதான் சொல்லு வாங்களே "ஊருக்குதான் உபதேசம் எனக்கில்ல" என்று அப்படித்தான் இருக்கு இந்த சரத்துட கத.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ரவி:** அதுதானே வந்தமா போனமா என்றில்லாம சும்மா கடுப்பேத்திட்டு.

**சரத்:** நான் இத உங்கட அம்மாட சொல்லவா. சொன்னா என்ன நடக்கும்.

**ரவி:** சொல்லித்தான் பாரன் என்ன நடக்குதுன்டு. (ரவியின் வீட்டில் சரத்)

**சரத்:** ரவி... ரவி...

**ரவியின் தாய்:** யாரு? சரத்தா என்ன என்ட மகன் இப்பவும் உங்களோட Friend ஆ. நான் எத்தன தடவ சொல்ற.

**சரத்:** அவரு என்ட Friend தான் ஆனா அவரு இப்ப அந்தக் கடையடிய நிக்காரு School ல கூட அவருட நடத்த சரியில்ல.

**ரவியின் தாய்:** யாருட நடத்தைய யாரு சொல்றது என்று ஒரு அளவே இல்லாம போயிட்டு. நான்தான் என்ட பிள்ளையை கடைக்கு அனுப்பினன். அவன் தப்பான வேலை ஒன்றும் செய்யமாட்டான் அதுவும் உங்கட அப்பாவ போல. முதல்ல இங்க இருந்து போங்க. எனக்கிட்டையே வந்துட்டாரு என்ட பிள்ளையை கதைக்க.

### *காட்சி* - 5

**தொகுத்து வழங்குபவர்:** ஒரு வருட காலத்தின் பின் O/L பரீட்சை Result வெளியாகிய தினத்தின் நிலை.(ரவி, ரவியின் தாய், ரவியின் தந்தை, சரத், சரத்யின் தாய், சரத்யின் தந்தை, மாலா, கடைக்காரி) ( ரவியின் தாய் வாசலை பார்த்தவாரு)

**ரவியின் தாய்:** இங்க பார்த்திங்களா அந்த குடிகாரன்ட மகன் சரத் O/L 9A ஆனா நாம நம்மட பிள்ளைய எப்படி வளர்த்தம் அவன்ட Result இப்படி.

**ரவியின் தந்தை:** அது அந்த பிள்ளைட முயற்சி நம்மடவன் அப்படிய்யா இல்லியே. காலையில போனவன் இன்னும் வரல்ல நான் போய் பார்த்துட்டு வாரன்.

**ரவியின் தாய்:** ஆ சரி போய் பாருங்க எங்கண்டு. (ரவி நிதானமற்ற நிலையில் வருதல்) டேய் மகன் இது என்னடா, என்ன காரியம் செய்திருக்காய்.

**ரவியின் தந்தை:** இது என்னடா.

**ரவி:** அப்பா நான் இது இன்றைக்கு மட்டும் புதுசா செய்யல நான் சில ஆண்டுகளா செய்திட்டு தான் வந்தன். ஆனா அது உங்களுக்கு தெரியாம அதோட இவ்வளவு அதிகமாகவும் இல்ல. ஆனா இன்றைக்கு என்னடான்டா அந்த சரத்ட Result ஓட ஒப்பிட்டு என்ன ஒரமா காயப்படுத்திப் போட்டிங்க.

**ரவியின் தாய்:** இது யாரால? எப்ப இருந்து வந்தது? அந்த சரத் பையனா காரணம்.

**ரவி:** அவனுக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்ல. (ரவியை அழைத்துக் கொண்டு சரத்தின் வீட்டிற்கு செல்லல்)

**ரவியின் தாய்:** சரத்... சரத்.. எங்க இருக்கிங்க? நல்லவனான என்ட பிள்ளைட வாழ்கையை நாசமாக்கி போட்டு நீ நல்லா இருக்கிய்யா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாலா:** வாங்க என்ன சொல்றீங்க. (சரத்யின் தாய், சரத்யின் தந்தை, சரத் வருதல்).

**ரவியின் தந்தை:** என்ட பிள்ளை இப்ப சாராயம் குடிச்சிருக்கான். அதனால்தான் நான் இப்ப இங்க வந்திருக்கன். சரத்தான் அன்று எனக்கிட்ட வந்து இப்படியெல்லாம் சொன்ன.

**சரத்தின் தாய்:** என்ட பிள்ளை அப்படி பாவிக்கவே மாட்டான். அது எனக்கு நல்லாத் தெரியும். ஏன்னென்றா நானும் என்ட பிள்ளைகளும் கேடான குடியால நல்லா கஷ்டப்பட்டுட்டம்.

**சரத்:** ஆ நீங்க சொல்றது உண்மைதான் Unty. நான் அன்று உங்கள்ட வந்து சொன்னன்டு சொல்றது. ஆனா அவன் இப்படி பழக நான் காரணம் இல்ல. அப்போ நான் சொன்னபோ நீங்க எனக்கு ஏசினிங்கலே தவிர அதக் கொஞ்சமும் நம்பல. (கடைக்காரி அழுது கொண்டு வருதல்)

**கடைக்காரி:** ஐயோ!.. ஐயோ!.. நான் என்ன செய்வன் யாருட்ட போய் நிப்பன் எனக்கு யாரு உதவுவா.

**மாலா:** என்ன? என்ன? கொஞ்சம் அழாம சொல்லுங்களன்.

**கடைக்காரி:** நான் என்னன்டு சொல்லுவன் என்ட பிள்ளை O/L Result 9A இல்லியாம்டு தப்பான முடிவு எடுத்துட்டானாம். இப்ப Hospital ல இருக்கானாம் இப்பதான் Call வந்திச்சி அதுதான் சொல்லுவாங்களே "செய்தாருக்கு செய்த பலன்" அப்படி என்ட வாழ்கையிலும் நடந்துட்டு இந்தா நிற்கிற ரவிபோல பிள்ளைகள என்ட பிள்ளை படிக்கணும். அதுக்கு பணம் வேண்டும் என்று இப்படியான போதைப் பழக்கத்துக்கு அடிமையாக்கினன். அதான் எனக்கு இந்த தண்டன. என்ன மன்னித்திடுங்க எல்லாரும். ரவி என்ன மன்னிச்சிடுப்பா. நான் இனியும் இப்படி ஒன்ற செய்யவே மாட்டன்.

**ரவியின் தாய்:** இப்படியாக நீங்கான் காரணமா.நானும் என்ட பிள்ளை கெட சரத்தான் காரணம்டு நினைச்சிடன். இப்பவாவது உணர்ந்திங்களே. இப்ப நான் எப்படி பழைய ரவியா மாற்றி எடுக்குற. சரத் என்ன மன்னித்திடு மகன். நீ அப்போ அந்தக் கடையடிய என்று சொன்னபோவே நான் என்ட பிள்ளைய பார்த்திருக்கனும்.

**ரவியின் தந்தை:** வெள்ளம் தலைக்கு மேல போய்ட்டு என் செய்ற வா பார்ப்பம். மன்னித்திடு சரத்.

**சரத்:** ஏன் நீங்க இப்படி பெரிய வார்த்தையலாம் சொல்லிட்டு (மாலா, சரத் ஆகியோரை கட்டியனைத்து)

**சரத்தின் தந்தை:** நீங்க எல்லாரும் என்ன மன்னித்திடுங்க. இப்பதான் நான் நீங்க படுற அவமானத்த நேர்ல பார்த்தன். நான் இவ்வளவு நாளும் எவ்வளவு மோசமா நடந்திருக்கன் என்றும் விளங்கினன். என்ன மன்னிச்சிடுங்க.

**மாலா,சரத்:** ஏன் அப்பா நீங்க இப்படி பெரிய வார்த்தை எல்லாம் சொல்லிட்டு.

**மாலா:** எங்களுக்கு நீங்க தப்ப உணர்ந்து மனம் மாறினதே போதும்.

**ரவி:** அம்மா!.. அப்பா!.. சரத்! எல்லோரும் என்ன மன்னித்திடுங்க. நானும் என்ட தப்ப உணர்ந்துட்டன். இனி இப்படி ஒரு காரியம் செய்யவே மாட்டன். நான் இப்படி செய்த என்ட பாட்டி என்ன விட்டு பிரிந்ததாலதான் ஆனா நீங்கதான் பிரிச்சிங்க. பாட்டி அங்க ஆசரமத்துல மனவேதனையோட இருக்காக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ரவியின் தாய்:** அது கூட என்ட தப்புதான். கடவுள் என்ன இப்படி தண்டித்திருக்கான். நான் ஒரு தாயையும் பிள்ளையையும் பிரிச்சன். ஆனா இது பிரிவோட பெரிய கொடுமையா இருக்கு. வாங்க இப்பவே போய் பாட்டிய நம்மட வீட்டையே கூட்டி வருவம்.

**சரத்தின் தாய்:** இதுக்கெல்லாம் கடவுளுக்குதான் நன்றி சொல்லனும். அததான் சொல்லுவாங்களே கெட்டதுலயும் ஒரு நல்லது நடக்கும் என்று அது உண்மைதான்.

**மாலா:** அதுதான் தன்ட தப்ப தானாக உணரும் வரை யாரும் திருந்தமாட்டாக. இப்படியே இந்த "O/L, A/L பிள்ளைகளுடைய மனமும் மாற வேண்டும் Result தான் வாழ்க்கை அது இல்லாட்டி ஒன்றும் இல்ல" ஆனா அது தவறானது. அதுல நமக்கு கிடைக்கலியா அதைவிட தேலான ஒன்றை அடைய முயற்சி செய்யலாமே தவிர முட்டாள்தனமா முடிவெடுக்கபோடா.

(அனைவரும் ஒன்றிணைந்து)

***"உள்ளம் உணராத வரை தன் வாழ்வு காரிருளே!".***

***நன்றி***

## ஆக்கம்:

***முகம்மது மன்சூர் பாத்திமா றுஸ்தா***

*(சாய்ந்தமருது மழ்ஹறுஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயம்)*

837/1, *தண்டயல் வீதி, சாய்ந்தமருது*- 17





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மது எனும் அரக்கன் மாய வேண்டும்.

வீடு, குடும்பம், சமயம், சமூகம், நாடு, உலகம், என எவ்வித வேறுபாடுமின்றி எங்கும் வியாபித்துக் காணப்படும் மனித உடலையும்,உள்ளத்தையும் மாசுமடுத்தி மனிதர்களை இழிவு படுத்தும் இழிய பொருளே போதைப் பொருளாகும்.

மனிதர்களைப் பொருத்தமட்டில் அவர்களிடத்தில் கொலை, களவு, கொள்ளை முதலிய பாதகச் செயல்கள் பல அதிகரித்து வருவதை நாள்தோறும் வெளிவரும் நாளிதழ்களிலும;, பொலிஸ் பிரிவினர் வெளியிடும் அறிக்கையைக் கொண்டும் அறிய முடிகிறது. இந்நிலைக்கு காரணமாய் பல உள்ள போதும் அவற்றுள் சிறப்புடைக் காரணமாய் அமைவது மதுபானம் போதை ஊட்டி மதியை மயக்கி மக்களை மாக்களாக்கும் அனைத்தும் மதுவில் அடங்கும். கஞ்சா, அபின், பிதாண்டி, விஸ்கி முதலியன பல்வேறு உருவம் கொண்ட மது வகைகளாகும்.

மதுவை அருந்தும் மனிதர்களிடம் அதற்கான காரணங்கள் வினவப்படின் அவர்களால் முன்வைக்கப்படும் காரணங்கள் வெகு விசித்திரமானவை. மன அமைதியைப் பெற அதாவது துன்பங்கள், துயரங்களை, இன்னல்களை இழந்து மன அமைதியைப் பெறல். வேலைப்பழுவால் ஏற்படும் களைப்பையும், சோர்வையும் நீக்குவதற்கான சமஞ்சீவி மதுவெனக் கருதி மதுவை அருந்துதல். மேலும், மதுவை அருந்துதல் மேலைத்தேய கலாசாரம் என்றும் அதனை அருந்துவது உயர்வு எனவும் குறிப்பிடுகின்றனர். அவ்வாறே அதனூடாக மயக்க நிலையில் ஒரு வகையான இன்பத்தைப் பெற முடிவதாகவும் கூறுகின்றனர். இவ்வாறு கூறி மதுவிற்கு அடிமையாகி மனிதன் தனது முழு வாழ்வையும் வீணாக்குகின்றான்.

"ஆழம் அறியாது காலை விடாதே!" என்பது பழமொழி. ஆனால் அந்த பழமொழியை மனிதன் பலவீனமான மொழியாக மாற்றுகின்றான். எவ்வாறெனின் மது அறிவை மயக்குவது கொடிதினும் கொடியது என்ற உண்மையை அதாவது மதுப் பாவனையின் ஆழத்தை அறிந்தும் மனிதன் அத் தீய செயல்களில் ஈடுபடுகின்றானே எனவே, இதிலிருந்து மனிதன் விலக்குப் பெறுவது மிக முக்கியமானது ஆகும்.

மேலும், கடவுளால் படைக்கப்பட்ட படைப்புக்களில் மனிதன் மிக சிறப்பிற்குரிய அதாவது முதன்மையான படைப்பாகப் படைக்கப்பட்டிருக்கிறான். மனிதப் பிறவியானது ஆறு அறிவு அதாவது இது தக்கது, இது தகாது என உணர துணை புரியக் கூடிய பகுத்தறிவை உடையவனாகிறான். இதனாலே மனிதப் பிறவி சிறப்புப் பெறுகின்றது. இதனை ஔவையார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "அரிது அரிது மானிடராதலரிது" பகுத்துணரும் பண்பு மனித பண்பாகும். இது மனிதர்களுக்கு வழங்கப்பட்ட ஒரு பொக்கிசமாகும். இப் பொக்கிசம் இழக்கப்படுமிடத்து மனிதன் இழிவு நிலையை அடைந்து மாக்களாகின்றான்.

"அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்பது முதுமொழி ஆகையால் மனிதனை மனிதனாக்குகின்ற, மனிதனுக்கு சிறப்பினை வழங்குகின்ற அறிவை மயக்கி விலங்கு நிலைக்கு தள்ளும் எப் பொருளாயினும் அது விண்ணோர் அமிர்தமாய் இருப்பினும் சரி அது அளவை விட அதிகரிக்கும் போது மனிதனது சீரிய அறிவை மயக்கி, அவனை விலங்கு நிலைக்கு தள்ளுகின்றது. ஆகையால் அதுவும் மனிதனை விட்டும் தூரமாக்கப்பட வேண்டிய ஒன்றே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே மதுப் பாவணை எனப்படும் போதைப் பொருள் பாவயையை எடுத்தோமானால் அதனால் மனித அறிவு மழுங்கடிக்கப்படுவதை தொடர்ந்து அதனால் ஏற்படும் விபரீதங்களோ ஏராலம். மது பாவணை ஏற்படும் பாதிப்புக்களானது தனி மனிதன் ரீதியான பாதிப்பு, குடும்பம் ரீதியான பாதிப்பு, சமூகம் ரீதியான பாதிப்பு, முழு நாடு ரீதியான பாதிப்பு, மேலும் ஒட்டு மொத்தமாக முழு உலக ரீதியான பாதிப்பு என பல் கோண பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. அவை பின்வருமாறு.

மது ஒருவரால எவ்வளவு விரைவாக நுகரப்படுகின்றதோ அவ்வாறே அவனது வாழ்வும் அவ்வளவு விரைவாக அழிகிறது. எவ்வாறெனின் மது அருந்துவதற்கான காரணங்களில் ஒன்று கலைப்பு நீக்கல் ஆனால் மது அருந்தியவன் மதுவின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட வேளையில் சோர்வு நீங்கி சுறுசுறுப்புடையவன் போல் தோன்றுவது உண்மையாயினும், அதன் ஆதிக்கம் தீர்ந்த பின் நீங்கிய சோர்விலும் பார்க்க பன்மடங்கு கூடிய சோர்வுடையவயன் ஆகின்றான். மேலும் அவனது சுய மரியாதையின் இழப்பிற்கு காரணமாக அடைதல், மனிதனது உடல் உறுப்புக்களை உருக்கல், உடலின் சீரான இயக்கத்தை பாதித்து ஈரலைச் சுருக்குதல், நரம்புச் தளர்ச்சி என்பனவற்றை ஏற்படுத்தல்.

அவ்வாறே மனித வாழ்வை தீய வழிக்கு இட்டுச் செல்கிறது. நளவெண்பா பஞ்சமா பாதகங்கள் குறித்து பின்வருமாறு கூறுகிறது. " காதல், களவாடுதல், கள்ளுண்ணல், பொய் மொழிதல், ஈதல் மறுத்தல் என்பன விலக்கப்பட வேண்டியதே" ஆனால் மதுவோ பொய், கொலை, கொள்ளை, களவு, கள், காமம் போன்ற பஞ்சமா பாதகங்களின் நடுநாயகமாகவும், ஒரு தாயகமாகவும் திகழ்கின்றது. இதனால் மது உண்டோரிடம் பகுத்தறிவு பிரயோகம் குறைவு அடைந்து நன்மை, தீமைகளை பிரித்தரிய முடியாத நிலை ஏற்படல். அத்துடன் காமுகனாகவும் மாறுதல். அத்துடன் மதுவிற்கு மயங்கிய ஒருவன் அதற்காக தனது கையிருப்பு அனைத்தையும் அதில் கரைத்து விடுகின்றான். பின்னர் மதுவுக்கும் தனக்கும், குடும்பத்துக்குமாக பொருளீட்ட பல குறுக்கு வழிகளில் பயணிக்கின்றான். இதனால் பல துயரங்களையும் அடைகின்றான். இதனால் துணிந்து கையிலுள்ள சிறு பொருளையும் இழந்து நடைபிணமாகின்றான்.

மேலும், பொருளற்ற நிலையில் பொய் பேசுதல், கடன் படுதல், பிறரை இரந்து பின்னிற்றலுமாகிய இழிகுணங்கள் அவனைத் தொடருகின்றது. மது போதையினால் மழுங்கிய அவனது அறிவு பிறரது செயலையும்,சொற்களையும் பகுத்து உணர முடியாத நிலைக்கு தள்ளப்படுகின்றது. இதனை பெருங்கலகக்காரர் ஆகவும், நிதானம் அற்ற கொலை காரர் ஆகவும், சில வேளை மாறும் நிலை ஏற்படுகின்றது. இவ்வாறு பல பிரச்சினைகளை மதுப் பாவணை தனி மனித ரீதியாக ஏற்படுத்துகின்றது. அத்துடன் உயிர் இழப்பதற்கான வாய்ப்பும் உண்டு.

இவ்வாறே, மதுப்பாவணையானது குடும்ப ரீதியாகவும் பல்வேறு பாதக பங்கை வகிக்கின்றது. எவ்வாறெனின் ஒரு குடும்பத்தின் தலைவன் அல்லது தலைப்பட்ட ஆண் மக்களோ மது பாவணைக்கு அடிமையாகி இருப்பார்களாயின் அதனால் ஏற்படும் விபரீதங்கள் மிக அதிகமே தான் பாடுபட்டு உழைக்கும் தனது உழைப்பு முழுவதுமாக மதுவின் அடிமை மதுவுக்கு வேளை அவனது உழைப்பை நம்பியுள்ள குடும்பம் சீரழியும். குடும்பத்தில் பசி பசி எனும் புலம்பல் ஒலித்துக் கொண்டே இருக்கும். வறுமை குடி கொள்ளும். அவ் வீட்டுக் குழந்தைகளின் கல்வி நிலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிப்படையும். மேலும், தனது உழைப்பை மது அரக்கனுக்கு பலியிட்டு போதமற் போக தனது முன்னோர் முன்னரே தேடி வைத்த பொருட்களையும், காணிகளையும் அழித்து ஒழித்து விடுகின்றான்.

அவ்வாறே, தனது குழந்தைகளின் எதிர் காலம் கேள்விக் குறியாகும் நிலை ஏற்படல், பரம்பரை ரீதியாக இப்பாவனையை பின் தொடரும் வாய்ப்பு அதிகம் இருத்தல், மேலும் இன்னும் சந்தோசமும் உள அமைதியும் பெற வேண்டிய குடும்பமும் குடும்ப வாழ்வும் சகிக்க முடியாத நரக துன்பமாக மாறுவதுடன் அதன் குடும்ப அங்கத்தவர்கள் ஒரு வகையான உள நோய் அல்லது உள அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருத்தல். அவ்வாறே, அக் குடும்பமும;, குடும்ப உறுப்பினர்களும் ஏனையவர்கள் மத்தியில் இழிவாக நோக்கப்படல்.

"உண்னற்க கள்ளை: உணிலுண்க சான்றோரால் எண்ணப்பட வேண்டா தார்" என மதுப் பாவனையால் ஏற்படும் இழி பயன் எடுத்துக் காட்டப்படுகின்றது. எனவே மது அதாவது போதைப் பொருட் பாவனை ஒழிக்கப்பட வேண்டிய ஒன்றே."

மருந்து அருந்துவர் மதுப் பாவனையானது தனி மனிதனுக்கு, குடும்பதுக்கு என மாத்திரம் பங்கம் விளைவிக்காது அது சமூக ரீதியாகவும் பாதிப்பை செலுத்துகின்றது. ஒரு சமூகத்தின் அடிப்படை அலகு குடும்பம் ஆகும். குடும்பம் என்பது தனி மனிதரை அடிப்படையாக கொண்டதாக காணப்படுகின்றது.

எனவே மதுப் பாவனையின் தாக்கம் பின்வருமாறு அமைகின்றது. ஒரு தனி மனிதன் தனது பொருளீட்டலை மதுவிற்கு அழிக்கும் இடத்து குடும்ப வருமாணம் குறைவடையும் இதனால் சமூகம் பொருளாதார ரீதியாக பின்நோக்க வேண்டிய நிலை ஏற்படும். இன்றைய கால கட்டத்தில் சிறுவர் பெறியோர் என எவ்வித வயது வித்தியாசமும் இன்றி மது பயன்படுத்துவதனால் அறிவு வளர்ச்சி பாதிப்படையும் இதனால் அறிவு ரீதியாக சமூகம் பாதிப்படையும்.

மேலும், இவ்வாறான மதுப்பாவனையானது பல வித பாதகமான நோய் நிலைகளையும் ஏற்படுத்துகின்றது. வாய்ப்புற்று நோய்,குடல் புற்று, ஈரல் சுருங்குதல், நரம்புத் தளர்ச்சி ஏற்படுகின்றது. இதனால் சுகாதாரப் பிரச்சினை ஏற்படுகின்றது. மேலும், இப்பாணைகளில் பலர் தற்போது மனநோயாளிகளாகவும் காணப்படுகின்றனர். இதற்கு எல்லாம் மேலாக மதுவானது மனிதனை மாய்க்கும் நஞ்சாக தொழிற்பட்டு மரணம் வரை கொண்டு செல்கின்றது. இது குறித்து திருவள்ளுவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"துஞ்சினார் செத்தாரின் வேதல்லங் எஞ்ஞான்றும் நஞ்சுன்வார் கள்ளுன் பவர்"

அத்துடன் மது பாவணையின் தொழிற்பாட்டின் விபரீதங்கள் சமூகத்தை தொடர்ந்து நாடளாவிய ரீதியிலும் பாதிக்கின்றது. ஏன் எனில் நாட்டின் அடிப்படை சமூகம் ஆகும். இப் பாவணை நாட்டின் அபிவிருத்தி நிலையை பாதிக்கின்றது. எவ்வாறெனின் நாட்டின் அபிவிருத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பணமும் உழைப்பும் மதுவால் மாய வைக்கப்படுகின்றது. மேலும் உயிர் இறப்பு அதாவது மரண வீதம் அதிகரித்து நாட்டின் பிரஜைகளின் போசாக்கு நிலை கேள்விக் குறியாதல் என பல விபரீதங்கள் அவற்றால் ஏற்படுத்தப்படுகின்றது. சிலரிடத்தில் இதனால் வருமானம் கிடைக்கின்றது தானே எனும் சிந்தனையும் காணப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது முற்றிலும் தவறான ஒரு சிந்தனையாகும் ஏனெனில் இப் போதை, மதுப் பாவணையால் ஏற்படும் நோய் நிலைமைகளையும், விபத்துக்களையும், போசாக்கு குறைபாட்டு நிலைமைகளையும் நிவர்த்தி செய்வதற்கான செலவு அதனால் வரும் வருமாணத்தை விட அதிகமாககும். இவற்றிற்கு எல்லாம் மிக மேலான பாதகம் நாட்டிற்கு பொருத்தமான மிக உயர்வான பண்புகளையும் உடைய பிரஜைகளைப் பெற முடியாத நிலையும் உருவாகும். எனவே நாட்டின் நல்வாழ்வுக்கு மது விலக்கு மிக முக்கியமே.

ஆகவே மது ஒழிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். மது நாட்டை விட்டும் வீட்டை விட்டும் விலக்குப் பெற மது அருந்தும் மக்களுக்கு மனமாற்றம் ஏற்பட வேண்டியது மிக முக்கியமான ஒன்றாகும். மனித மனம் மாற்றம் அடையும் போது மாத்திரமே நாட்டில் நிகழ்த்தும் கோர நர்த்தனங்களை விட்டும் ஒதுங்கி மக்களால் அறிவு ரீதியாக சிந்திக்க முடியும்.

மேலும் மக்களிடத்தே மன மாற்றம் ஏற்படாதவிடத்து ஆட்சியாளர்கள் மது விலக்குச் சட்டங்களை பிரகடனப்படுத்திலும் பெரும் பயன் எதனையும் கண்டிருக்க முடியாது. சட்டத்தின் கண்ணில் மண்ணை தூவிவிட்டு. மக்கள் கள்ள வழிகளில் மதுவை உற்பத்தி செய்து அருந்துவர். தனிமனித வாழ்வையும் குடும்ப வாழ்வையும் சீர்குலைத்து அழிவு செய்வதனால் தீமைகளிற் பெருந் தீமை மதுவென மக்கள் சந்தேக விபரீதத்தை உணர்தல் வேண்டும்.

அவ்வாறே மதுவின் விபரீதங்கள் குறித்து கிராமம் தொட்டு நகரம் வரை பல வழிகளில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மிக முக்கியமான ஒன்றாகும். இதில் பெண்களின் பங்கும் மிக முக்கியமான ஒன்றாகும்.

மதுவின் பாவணையானது நாம் முன்னர் பார்த்தது போன்று மதியை மயக்கி பஞ்சமா பாதகங்களிலும் ஈடுபடுத்தக் கூடிய ஒன்றாக அமைகின்றது. குடும்ப வாழ்வையும் தனி மனித வாழ்வையும் கெடுத்து நாட்டை சீரழித்து மனிதனை பாதகமான செயல் புரிபவனாக மாற்றுகிறது . எனவே இது விலக்கப்பட வேண்டிய ஒன்றே.

ஆகவே மது விலக்கு வெற்றி பெற மது அரக்கன் மாய ஒவ்வொரு தனி மனிதரிடத்திலும் மனமாற்றம் ஏற்படுத்த வேண்டும். அறக் கொள்கைகளும் நடைமுறைபடுத்தப்பட வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் தனிமனித குடும்ப வாழ்வு என்பன வளம் பெற்ற சமூகம் , நாடு என்பன வளம் பெற்று நலம் பெறும்.

**“அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு”**

**“ஒற்றுமையே பலம்”**

**“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்”**

**ஆக்கம்**


**முஹம்மட் மன்சூர் பாத்திமா றுஸ்தா**

**கமு/கமு/மல்ஹர ஸம்ஸ் வீதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி




இரவினை வெல்லும் ரகசியம்
விடியல் அறிந்தது போல்
வாழ்வை வெல்லும் ரகசியம்
கல்வி அறிந்திடுவோம்.

அரச இலவசக் கல்வியை
அழகுறக் கற்று - நீ
வெற்றியை நோக்கி ஏறிடு!
மனவுறுதியுடன் முன்னேற்றப்படிகளில்!......

கரையில்லாக் கல்வியை
கசடறக் கற்று
கவலையற்ற வாழ்வை
நிதமும் கண்ணெதிரே வாழ்ந்திடு!

குழம்பிய குட்டை போன்ற வாழ்வை
தெளிந்த நீரோடையாய் மாற்றீடு - இது
உலகை தொழிநுட்ப வளர்ச்சியின்
உச்சத்திற்கே கொண்டு சென்றது.

கல்வி மொட்டு மலர மலர
வாழ்வு பூத்துக் குலுங்கும்
மழை கண்ட பூமி போல்
உலகம் தழைத் தோங்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி உளியால் - உன்
அறிவைச் செதுக்கி
கற்பனை வாழ்வை
நிஜமாக மாற்றிடு.

அறியாமைக் கல்லை சீரமைத்து
கல்வி எனும் சிற்பத்தை
களைப்பின்றி செதுக்கி
களிப்புடனே நெடுநாள் வாழ்ந்திடு!

அறியாமையை வென்றது கல்வி
ஏழ்மையை வென்றது கல்வி
வாழ்கைக்கு பாதை காட்டியது கல்வி
உலகை ஆள்கிறது கல்வி.

**ஆக்கம்:**


***எம். ஆர். எம். பிர்னாஸ்***

*(சாய்ந்தமருது அல் ஜலால் வித்தியாலயம் )*

*289 A/1, P.M. வீதி, சாய்ந்தமருது - 6*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை துடைத்துப் புதுயுகம் படைப்போம்...!




கார்குழல் மேவாள் இன்பக்
கனியுதிர் மொழியாள் தூய
சீர்,தளை, எதுகை, மோனை
சிறப்புறு வெண்பா போலப்
பார்புகழ் போற்றும் செவ்வான்
பரிதியின் ஒளியாய் மின்னும்
கூர்மதி யாளாம் ஈழக்
குமரியைக் காப்போம் வாரீர்..

இந்துமா ஆழி தந்த
எழில் மிகு தாயா ளீன்ற
சந்ததி போதை என்ற
சாக்கடைக் குள்ளே நீந்தி
குந்தகம் ஆடும் கெட்ட
கொடுமையை ஒழிப்பதற்காய்
வந்துகை கோர்ப்பீர் இன்றே
வாழ்வியல் பசுமை காண..

அந்நியர் ஆட்சிக் குள்ளே
அடிமையின் விலங் குடைத்து
தன்னைத்தான் ஆளும் நல்ல
தகைமையைப் பெற்ற பின்னும்
துன்பியல் அரங்கேற்றத்தின்
தூணதாம் போதை வஸ்து
கண்களை மறைத்த தாலெம்
கலாச்சாரம் தொலைந்து போச்சே..

புத்தமும், இஸ்லாம், இந்து
போதித்த தென்ன? போதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தமே இழக்கச் செய்து
சீர் குலைத் திடுமென்றோத
அத்தனை தத்துவத்தை
அடியோடு மறந்து வீணே
கத்துகின்றோமே; சூழல்
காடேறிப் போனதென்று..

எழில் தரும் இளமொட்டுக்கள்
எதிர்கால வாழ்வை ஏனோ?
பழி பாவம் அறியாதாகிப்
பாழ்படுத் திடவே தூண்டும்
வழிகளில் மெல்லக் கொல்லும்
வடிவத்தில் சிறைப் பிடித்து
அழித்திடத் தூண்டும் போதை
அரக்கனை அழிப்போம் வாரீர்..

நேசமாய் வாழ்ந்த பல்லோர்
நெறி நிலை கெட்டு இன்று
நாசமாய் போனார் இந்த
நரகத்து வேதனைக்குள்
காசுக்காய் அலையும் மோசக்
கனவான்கள் பின் புலத்தால்
ஆசிக்க: அதுவே இன்று
ஆலமாய் வளர்ந்து போச்சே..

இன்றைய கால கட்ட
இளவல்கள் குடி போதைக்குள்
ஒன்றியே ஒழுக்கம் குன்றி
உலவியே கொலை, கொள்ளைகள்
பன்றியை விடவும் காமப்
பசியிலே புரியும் சேட்டை
ஒன்றிரண்டல்ல நாட்டில்
ஓங்கிடக் காண்கின்றோமே..

நோய்தரும் போதை தன்னை
நுட்பமாய் கடத்தி வந்து
மேய்கின்ற முதலைக் கூட்டம்
மேதகு அதிதி ஆகி
காய் நகர்த்த திட்டபோது
கனவுகள் கலைந்து போக
பாய்கிறார், புலிகள்போல
பலிக்குமோ குரங்குச்சேட்டை?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் தான் விட்டால் இதனை
இருட்டிலே எமது அன்னை
கண்ணுமே கெட்டுப் போன
கபோதியாய் மாற நேரும்
மன்பதை வாழ எல்லாம்
மதத்தினர் ஒன்று சேர்ந்து
கண்ணெனப் போற்றும் நாட்டைக்
காப்பது கடமை அன்றோ...

அத்தனை பாவத்திற்கும்
ஆணிவேர் போதை என்ற
தத்துவம் உணர்த்தி நாட்டில்
தலைவிரித் தாடும் நச்சுப்
புற்றினுள் பதுங்கும் பாம்பைப்
புரட்சியால் வெளிக் கொணர்ந்து
சட்டத்தின் முன்னிறுத்திச்
சரித்திரம் படைப்போம் வாரீர்....

**ஆக்கம்:**

**கோஸ் முகம்மது அப்துல் அஸீஸ்**

*91/1A, கல்யாண வீதி,*

*சாய்ந்தமருது-II*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமையாக்கிய தள்ளாத வயது



வாழ்கின்ற வாழ்க்கை நீரோட்டம் போலே
தன்பாட்டில் சென்றே வாவிகளில் சேரும்!

வாழ்கின்ற வாழ்க்கை நீரோட்டம் போலே
தன்பாட்டில் சென்றே வாவிகளில் சேரும்!
கருவோடு திருவாகவே உருவாகும்
வரமாகும் மோகங்கள் தீராமலே..

வாழ்கின்ற வாழ்க்கை நீரோட்டம் போலே
தன்பாட்டில் சென்றே வாவிகளில் சேரும்!

தள்ளாத வயதில் தீராத ஆசை
**சேராத உறவாய் வேறானது**
பாசமழை பொழிந்து உரமிட்ட இதயம்
நேசமெல்லாம் மறந்து பிரிவானது
பாடுகின்ற குயில்கள் கூடுகின்ற மேகம்
காலத்தின் மகிழ்வாகுமே.
வல்லமைகள்அழிந்து வாழுகின்ற காலம்
தேவைகளை மிகையாகுமே.
பிள்ளையென்ற பாசம் போதும் பகல் வேசம்
வாய்ப்புக்கள் இழந்து தேடுதே நியாயம்
நெஞ்சங்கள் ரணமாகுமே....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்ற வாழ்க்கை நீரோட்டம் போலே
தன்பாட்டில் சென்றே வாவிகளில் சேரும்!
கருவோடு திருவாகவே உருவாகும்
வரமாகும் மோகங்கள் தீராமலே..

வாழ்கின்ற வாழ்க்கை நீரோட்டம் போலே
தன்பாட்டில் சென்றே வாவிகளில் சேரும்!
வளர்ந்திட கொடியே கொழுகொம்பை
விலக்கிபடர்கின்ற விதத்தைப் பார்த்தாயடா
முதுமைதனைக் காட்டி இல்லங்களில் சேர்த்து

சூடுகின்ற வாகை வேண்டாமடா
வாலிபத்தில் புரியும் விபரீத செயல்கள்
வாழ்நாளின் வடுவாகுமே
பாதைகள் மாறி பயணிக்கும் பொழுதில்
போதனையில் சுகமில்லையே
சொந்தம் ஒரு காலம் சோர்ந்துவிடும் ஈற்றில்
நாளை இந்த செயல்கள் உனக்கென்று நிற்கும்
வேதனைதான் முடிவாகுமே..

வாழ்கின்ற வாழ்க்கை நீரோட்டம் போலே
தன்பாட்டில் சென்றே வாவிகளில் சேரும்!
வாழ்கின்ற வாழ்க்கை நீரோட்டம் போலே
தன்பாட்டில் சென்றே வாவிகளில் சேரும்!

**ஆக்கம்:**

***அஸ்பியா அஷ்ரப்***
*489, ஆஸ்பத்திரி வீதி,*
*சாய்ந்தமருது – 7*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைப் போராட்டம்



அப்துல்லாஹ்வின் சேட் பொக்கட்டில் இருந்து தொலைபேசி மணி அடிக்கின்றது. பொக்கட்டிலிருந்து கையில் எடுத்து யாரின் அழைப்பு என்று பார்க்கின்றார். அழைப்பில் அவரது மகள் ஆயிஷா.

அப்துல்லாஹ் தொலைபேசியில் சாதாரணமாக காதில் வைத்துபேசுவதை போலல்லாமல் ஸ்பீக்கரில் போட்டு பேசுகிறார். அவரது தொலைபேசி பழுதடைந்திருந்தது போலும். பாவம் அந்த ஏழையால் புதிய தொலைபேசி யொன்றை வாங்க முடியாமலிருந்தது. பேசுவதற்கு மட்டும்தானே தனக்கு தொலைபேசி தேவை. எப்படியாவது அதில் பேசுவது கேட்கின்றது தானே என்ற எண்ணத்தில் அவர் புதிய தொலைபேசியொன்றை வாங்குவதற்கு முன்வரவில்லை.

"ஹலோ.. அஸ்ஸலாமுஅலைக்கும் மகள். சொல்லுங்க?"

"வஅலைக்குமுஸ்ஸலாம் வாப்பா. வாப்பா.. ஏதாச்சும் ஹயர் வந்திச்சா?"

"இல்ல ஆயிஷா. இன்னும் ஒன்னுமே வரல. நானும் அங்க இங்கனு அலஞ்சி திரியுரன்தான் ஒருவரும் வரமாட்டேன்குறாங்க மகள். உச்சி வெயில் மண்டய பொழக்குது."

"ஹா...சரி வாப்பா."

"ஏன் மகள் ஏதும் பிரச்சினையா?"

"ஒன்னுமில்லவாப்பா நேரம் 2 மணி ஆகுது. வீட்டுல யாருமே விடிஞ்சதுல இருந்து இன்னும் சாப்பிடல. தம்பி பசிக்கிதுனு அழுதுட்டு அசதியில் தூங்கிட்டான். சாராவும் அழுதுட்டு இப்போ விளையாடிக்கிட்டு இருக்கா. உம்மாவும் எதுவும் சாப்பிடல. அதால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்தும் இன்னும் போடல வாப்பா. வீட்டுல ஒன்னும் இல்ல. சோத்துல தண்ணி ஊத்தி குடிக்குறத்துக்கும் அரிசி இல்ல. எனக்கு தம்பி தங்கச்சியயும் உம்மாவையும் பாக்குறப்போ பாவமா இருக்கு. அதுக்குத்தான் ஹயர் ஏதும் வந்திருந்தா அரிசி பருப்பு வாங்கிட்டு வரச் சொல்லலாம்னு கோல் பண்ணினன் வாப்பா."

"மகள் கொஞ்சம் பொறுத்துக்கங்க. அல்லாஹ் நம்மள கை விட மாட்டான்."

"சரி வாப்பா. நான் வைக்கிறன்."

தொலைபேசியை வைத்துவிட்டு ஹயர் தேடுவதில் மும்முரமாக ஈடுபட்டார் அப்துல்லாஹ். நடந்து செல்பவர்க ளிடமெல்லாம் சென்று "ஆட்டோ வேணுமா நானா? ஆட்டோ வேனுமா ராத்தா?" என்று அழைத்துக் கொண்டிருந்தார். இறைவன் கருணையால் ஒரு ஹயர் வந்து சேர்ந்தது அப்துல்லாஹ்வுக்கு.

அப்துல்லாஹ் ஆட்டோ செலுத்தி அன்றைக்கு அன்றை உழைக்கும் ஒரு தொழிலாளி. ஆட்டோவும் சொந்த ஆட்டோ கிடையாது. ஹாஜியார் ஒருவரின் ஆட்டோ. அந்த ஆட்டோவை அப்துல்லாஹ் கிழமைக்கு மூவாயிரம் ரூபாய் என்ற வாடகையின் அடிப்படையில் செலுத்திக் கொண்டிருக்கின்றார். அப்துல்லாஹ் ஒரு கிழமைக்கு எவ்வளவு ஹயர் சென்று எவ்வளவு உழைத்தாலும் ஆட்டோ வாடகை மூவாயிரம் ரூபாய் கொடுத்தே தீரவேண்டும். ஆதலால் சில சமயம் சில காசு கையில் மிஞ்சும். சில சமயம் வாடகை கொடுக்கவே கையில் இல்லாமலிருக்கும். இவ்வாறான போராட்டத்தின் மத்தியில் அப்துல்லாஹ்வின் வாழ்க்கை சென்றுகொண்டிருக்கும் போது கொரோனா எனும் ஆட்கொல்லி வைரசினால் நாடு முழுவதும் ஊரடங்கு சட்டம் அமுலாக்கப்பட்டது. இவ்வாறாக நாளாந்தம் உழைத்து சாப்பிடும் மக்கள் ஊரடங்கு சட்டம் போட்டால் எப்படி வாழ்க்கை நடத்துவார்கள்?

அப்துல்லாஹ்விற்கு ஆயிஷா, மலிக், சாரா என்று 3 பிள்ளைகள். ஆயிஷாவிற்கு பதினேழு வயது, மலிக்கிற்கு 8 வயது, சாராவிற்கு 3 வயது. அப்துல்லாஹ்வின் மனைவி இரண்டு வருடங்களுக்கு முன் பக்கவாத நோயினால் பாதிப்படைந்து படுத்த படுக்கையில் இருக்கிறார். தனியார் வைத்தியசாலையில் செலவு செய்து நோயை குணப்படுத்தும் அளவிற்கு அப்துல்லாஹ் விடம் வசதி இல்லை. அரச வைத்தியசாலையை நம்பியே இருக்கின்றார். சாராவையும் மலிக்கையும் தாய் போல் கவனிப்பது ஆயிஷாதான்.

வைரசின் காரணமாக திடீரென அமுலான ஊரடங்கின் காரணமாக தொழிலும் இல்லாமல் வீட்டிலிருந்த கொஞ்சப் பொருட்களுடன் காலத்தை கடந்தனர் அப்துல்லாஹ்வின் குடும்பதினர். ஊரடங்கு தளர்த்தப்பட்டதன் காரணமாகவே அப்துல்லாஹ் இன்று ஆட்டோவை எடுத்துக் கொண்டு தொழில் தேடிச் சென்றுள்ளார்.

நேரம் 3.30 மணியளவில் இருக்கும் வீட்டிற்கு வந்த அப்துல்லாஹ்வை ஓடி வந்து கட்டியணைத்துக் கொண்டாள் கடைக்குட்டி சாரா. தினமும் வேலை விட்டு வீடு வரும் போதெல்லாம் சாராவிற்கும் மலிக்கிற்கும் சொக்லட் வாங்கிவருவதை வழக்கமாக்கிக் கொண்டார்.

"வாப்பா எனக்கு சொக்லட் தாங்க..."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு சொக்லட்டை கையில் கொடுத்து "நானாக்கு ஒன்னு கொடுங்க மகள்."

"சரி வாப்பா"

உள்ளே ஓடினாள் சாரா.

ஆயிஷாவின் கையில் ஒரு பையைக் கொடுத்து, "அல்லாஹ்வின் கருணையால் ஒரு ஹயர் வந்திச்சி மகள். இருநூறு ரூபா தான் கிடைச்சிது. அரிசி மட்டும்தான் வாங்க முடிஞ்சிது."

"சரி வாப்பா. சோறு ஆக்கி தேங்காய் ஒரு பாதி இருக்கு சம்பல் போடுறன். இன்றைய பொழுதுக்கு சாப்பாடு தந்ததுக்கு அல்லாஹ்வுக்குத்தான் நன்றி சொல்லனும் வாப்பா."

அப்துல்லாஹ் கவலையுடன் வாசலில் யோசனையுடன் அமர்ந்து கொண்டிருந்தார். உள்ளே அவனது தொலை பேசி அழைப்பொன்று வந்தது. ஆயிஷா தொலைபேசியை அப்துல்லாஹ்விடம் எடுத்துக்கொண்டு வந்து கொடுத்தாள். அழைப்பில் ஹாஜியார்.

"ஹலோ அஸ்ஸலாமுஅலைக்கும் ஹாஜியார்."

"வஅலைக்குமுஸ்ஸலாம் அப்துல்லாஹ். நான் எதுக்கு இப்போ கோல் பண்ணேன்னா நீ ஆட்டோ வாடக தந்து 3 கிழமை ஆகுது. உன்னோட நிலம எனக்கு புரியுது. இருந்தாலும் எனக்கு இப்போ பணக் கஷ்டமா இருக்கு. காசு கொஞ்சம் அவசரமா தேவப்படுது. அதால நீ தரவேண்டிய வாடக காச கொஞ்சம் சீக்கிரமா தர பாரு. என்ன தப்பா நிசைச்சிக்காத அப்துல்லாஹ்."

"சரி ஹாஜியார். நான் சீக்கிரமா உங்ககாச தர பாக்குறன்."

"ஆ.. சரிவெக்கிரன்."

ஏற்கனவே கவலையில் இருந்த அப்துல்லாஹ்வின் தலைமேல் இன்னுமொரு இடி விழுந்ததை போலிருந்தது. அந்த சமயத்தில் உள்ளே வேலை செய்து கொண்டிருந்த வானொலிப் பொட்டியிலிருந்து ஒரு செய்தி ஒலிபரப்பபட்டது.

"கோவிட் - 19 தொற்று நாடு முழுவதும் மிக வேகமாகப் பரவி வருவதனால் அதனைக் கட்டுபடுத்துமுகமாக நாளை காலை 8 மணி முதல் மறு அறிவித்தல் வரை நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப் பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகத்திலிருந்து தகவல்."

இதுதான் அச்செய்தி. ஒரு மனிதனால் அடுத்தடுத்து எத்தனை இடிகளை தாங்க முடியும். அப்துல்லாஹ் சுக்கு நூறாக நொறுங்கிப் போனார்.

"ஊரடங்குச் சட்டம் என்றால் தொழிலுக்குச் செல்ல முடியாது. தொழில் இல்லாமல் எப்படி மனைவி மக்களுக்கு பசி ஆத்துறது. ஹாஜியார் வேற வாடக காசு கொடுக்கணும். இனி என் குடும்பத்துட நிலம என்னவாகிறது."

தனக்குத்தானே பேசிக் கொண்டிருந்த அப்துல்லாஹ் இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தார். சமைத்த சாப்பாட்டை சாப்பிடவும் இல்லை. தூக்கம் வரவுமில்லை. சுபஹ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதான் சொன்னதும் அவசர அவசரமாக எழுந்து குளித்து வெளியில் எங்கோ செல்வதற்கு தயாரானார்.

அந்த சுபஹ் நேரத்தில் வீட்டின் கதவை திறந்தார். வீட்டு வாசலிலே இரண்டு மூட்டைகள் இருப்பதை கண்டார். என்ன மூட்டை என்று தெரியாமல் தயங்கித் தயங்கி அதன் அருகே சென்று மெதுமெதுவாக மூட்டையின் கட்டை அவிழ்த்துப் பார்த்தார். என்ன ஆச்சரியம். இரண்டு மூட்டைகள் நிறைய வீட்டுக்குத் தேவையான பொருட்கள். மூன்று நேரம் வயிறார சாப்பிடுவதற்கு கிட்டத்தட்ட ஒன்றரை மாதங்களுக்கு போதுமான பொருட்கள். கூடவே பத்தாயிரம் ரூபாய் காசும் ஒரு குறிப்பும் இருந்தது. அக் குறிப்பில் குறிபிடப்பட்டிந்தது,

"இவை உங்களுக்கு சேரவேண்டியவை.

இப்படிக்கு
நான் யாரோ."

அல்லாஹ்விடத்திலேயே சுஜூதில் விழுந்த அப்துல்லாஹ், நான் செய்யவிருந்த தப்பை தடுத்துவிட்டாய் நாயனே. இந்த அடியான் மேல் உனக்கு இவ்வளவு கருணையா? இதற்கு காரணமாக இருந்த அந்த கொடை வள்ளலை ஜன்னதுல் பிர்தௌசில் சேர்த்து விடு யா அல்லாஹ்" என்று இறைவனிடத்தில் கதறிக் கதறி மன்றாடினார் அப்துல்லாஹ்.

அப்துல்லாஹ் மனக் குழப்பத்தில் எடுத்த இறுதித் தீர்மானம் திருட்டு. இதுதான் அவர் செய்யவிருந்த தப்பு. இக் கொடை வள்ளல், ஆயிஷாவும் அப்துல்லாஹ்வும் தொலை பேசியில் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது கேட்டுக்கொண்டு நின்றவர்.

இவ்வாறானவர்களுக்குத்தான் இப்படியான நிலையில் உதவி செய்ய வேண்டும். இப்படியான ஒருவருக்கு உதவி செய்ய தனக்கு சக்தியை கொடுத்த அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தியவராக அல்லாஹ்வின் மாளிகையில் சுஜூதில் விழுந்தார் அந்த கொடை வள்ளல்.

**ஆக்கம்:**

***அப்துல் றஹீம் பாத்திமா சப்னா***

284 D, *ஒஸ்மன் வீதி,*

*சாய்ந்தமருது – 6*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணவம்



பட்டமொன்று வானத்தில் மிக உயரமாகப் பறந்து கொண்டிருந்தது.

தான் உயரமாகப் பறப்பதனால் அது ஆணவம் அதிகமாகக் கொண்டிருந்தது.

கீழே பூக்களின் மீது பறந்து கொண்டிருந்த வண்ணத்துப் பூச்சியைப் பார்த்து "என்னை பார்த்தாயா, நான் வானத்தைத் தொடும் அளவு மேலே பறக்கிறேன். நீயோ மிகவும் தாழ்வாகப் பறந்து கொண்டிருக்கின்றாய்" என்று பெருமை பேசியது.

பட்டாம்பூச்சி பதிலுக்கு "நான் என் விருப்பப்படி பறக்கின்றேன். நீயோ அடிமையாய் நூலால் கட்டப்பட்டு ஒரு சிறுவனின் விருப்பத்திற்கு ஆடுகிறாய்" என்றது. பட்டம் தனது ஆணவப் பேச்சு தவறு என உணர்ந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்பும் விலையும்



தையல்காரர் ஒருவர் தனது கடையில் துணிகளைத் தைத்துக் கொண்டிருந்தார். அவருடைய மகன் அருகில் இருந்து அவர் துணிகளை தைக்கும் விதத்தை பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்போது ஒரு புதுத் துணியை வெட்டுவதற்காக கத்தரிக்கோலை எடுக்கிறார். துணியை வெட்டியபின்பு கத்தரிக்கோலை எடுத்து தனது காலுக்கு கீழ் வைத்துக் கொண்டார்.

ஊசியை கொண்டு தைக்கத் தொடங்குகிறார். ஆனால் அந்த ஊசியை தலையிலிருக்கும் தொப்பியுடன் குத்திக் கொள்கிறார். அதை பார்த்த மகன் விலை உயர்ந்த கத்தரிக்கோலை காலுக்கடியிலும் ஊசியை தலையிலும் மாட்டுவது ஏன் என்று கேள்வி கேட்கிறார்.

அதற்கு அந்த தையல்காரர், கத்தரிக்கோல் அழகாக இருந்தாலும் மதிப்புள்ளதாகக் கருதப்பட்டாலும். அதன் செயல் வெட்டுவது மட்டும்தான். ஊசியின் விலை மலிவானதாக இருந்தாலும், சிறியதாகக் கருதினாலும் அதன் வேலை சேர்ப்பது மட்டுமே.

ஒருவருடைய மதிப்பு அவருடைய செயலைக் கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றது. அவர் உருவத்தை வைத்து அல்ல என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலியின் துன்பம்



பசி தாங்க முடியாத எலிகள் இரண்டு தாங்கள் ஒழிந்திருந்த வீட்டின் சமையல் அறைக்குள் புகுந்தன. அங்கே ஒரு பெரிய பானை நிறைய பால் இருப்பதை கண்டன.

ஆனால் அது உயரமான பானை. இதனால் பாலை குடிக்க முடியாமல் எலிகள் திண்டாடின. இதையடுத்து இரு எலிகளும் ஒரு முடிவுக்கு வந்தன.

ஓர் எலியின் மீது இன்னோர் எலி ஏறி பாலைக் குடிப்பது. அதன் பிறகு கீழே உள்ள எலி மேல் ஏறி பாலைக் குடிக்கலாம். என திட்டமிட்டு, அதைச் செயல் படுத்தின.


அதன்படி மேலே உள்ள எலி பாலைக் குடித்த போது, கீழே இருந்த எலி கத்தியது.

"போதும்! நான் பால் குடிக்க வேண்டும்." கீழே இருந்த எலி போட்ட சத்தத்தை கேட்டு மிரண்டு மேலே இருந்த எலி பால் பானைக்குள் விழுந்துவிட்டது.

இதைக் கண்ட கீழே இருந்த எலி "நல்லது, இனி எனக்குத்தான் எல்லாப் பாலும்" என நினைத்தது.

பிறகு அந்த பானையைச் சுற்றிச் சுற்றி வந்தது. ஆனால் மேலே ஏற முடியவில்லை. கடைசியில் பசியால் பாலையும் குடிக்க முடியாமல் வருந்தியது.


*நீதி : துன்பத்தில் இருந்து விடுதலை அடைய*
*மற்றவர்களின் ஒத்துழைப்பு தேவை.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடி வரும்



மன்னர் ஒரு முறை கிராமங்களை சுற்றிப் பார்க்க குதிரையில் கிளம்பிச் சென்றார். அப்போது வயலில் ஒரே பெண் மட்டும் வேலை செய்து கொண்டிருந்தார்.

மன்னர் அவரிடம் "மற்றவர்கள் எல்லாம் எங்கே? என்று கேட்க, விசாரிப்பது மன்னர் என்று அறியாத அந்த பெண், "அவர்கள் எல்லாம் மன்னரைப் பார்க்க போயிருக்கி றார்கள்" என்று சொன்னார்.

"அப்படியானால் நீங்கள் மட்டும் ஏன் போகவில்லை?" என்று மன்னர் கேட்டார். அதற்கு அந்த பெண் , மன்னரை பார்ப்பதற்காக ஒரு நாள் கூலியை இழக்கும் அளவிற்கு நான் முட்டாள் இல்லை. எனக்கு ஐந்து குழந்தைகள். அவர்களைக் காப்பாற்ற வேண்டிய கட்டாயம் எனக்கு இருக்கிறது. அதனால் நான் போகவில்லை" என்றார்.

மன்னர் அவரது கையில் சில நூறு பவுண் பணத்தை கொடுத்துவிட்டு, உங்களது நண்பர்களிடம் சொல்லுங்கள், நீங்கள் எல்லாம் மன்னரைப் பார்க்கச் சென்றீர்கள். ஆனால் மன்னரோ என்னைப் பார்க்க வந்தார் என்று." கூறிவிட்டு சென்றார். எதையும் தேடிச் செல்லாதே. தகுதி இருந்தால் எல்லாம் உன்னைத் தேடிவரும்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றம்

ஒருநாள் ஓபிசில் வேலை செய்யும் பணியாட்கள் நோட்டிஸ் போட்டில் ஏதோ எழுதியிருக்கிறதே என்று பார்க்கச் சென்றனர். அதில் உங்கள் வளர்ச்சிக்கு இடையூறாக இருந்த நபர் நேற்று காலமானார். அடுத்த கட்டிடத்தில் அவர் உடல் வைக்கப்பட்டுள்ளது. அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளவும்'' என்று எழுதியிருந்தது.

நம் வளர்ச்சிக்கு தடையாக இருந்த நபர் யாராக இருக்கும் என்று அறிவதில் அவர்களுக்கு ஆர்வம் ஏற்பட்டது. அனைவரும் அடுத்த கட்டிடத்திற்கு சென்றனர். சவப்பெட்டி வைத்திருக்கும் இடத்தை நோக்கி ஒருவர் பின் ஒருவராகச் செல்ல ஆரம்பித்தனர். சவப்பெட்டியை நெருங்க நெருங்க, 'நம் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தவன் யாராக இருக்கும்? நல்ல வேளை, அவன் இறந்துவிட்டான்' என்று நினைத்த படியே முன்னோக்கிச் சென்றனர். சவப்பெட்டியினுள் எட்டிப் பார்த்தவர்களுக்கு தூக்கிவாரிப் போட்டது.

அதில் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி மட்டுமே இருந்தது. சவப்பெட்டியினுள் யாரெல்லாம் பார்க்கிறார் களோ அவர்கள் முகமே அதில் தெரிந்தது.

கண்ணாடி அருகில் ஒரு வாசகம் எழுதியிருந்தது. உங்கள் வளர்ச்சிக்கு நீங்கள் மட்டுமே காரணம். நீங்கள் வளர வேண்டும் என்றால் அது உங்கள் கையில் மட்டுமே உள்ளது.

உங்கள் வளர்ச்சியை உங்களைத் தவிர வேறு யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்று எழுதியிருந்தது.
உங்கள் வாழ்க்கையை உங்கள் முதலாளியால் மாற்ற முடியாது. உங்கள் நண்பர்களால் மாற்ற முடியாது. நீங்கள் நினைத்தால் மட்டுமே உங்கள் வாழ்வை மாற்ற முடியும்.!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிய கதை



ஒரு மனிதன் மலை உச்சியிலிருந்து தவறி விழுந்த போது, தற்செயலாகப் பாறையின் விளிம்பில் நீட்டிக் கொண்டிருந்து ஒரு வேரைப் பற்றிக் கொண்டான்.

பிடி தளர்ந்தால் பாதாளம் போகும் அபாயம்! அவன் அதுவரை கடவுளை நம்பியதில்லை. அப்போது கடவுளை நினைத்து, "கடவுளே, உன்னை நான் முழுமையாக நம்புகிறேன். நீதான் என்னை காப்பாற்ற வேண்டும்" என்று வேண்டினான்.

அப்போது வானிலிருந்து ஒரு குரல்! "நீ என்னை நம்பமாட்டாய்.."

"கடவுளே, என்னைக் கை விட்டுவிடாதே, நிச்சயம் நம்புகிறேன்"

"எனக்கு நம்பிக்கை இல்லை."

"கடவுளே நீதான் காப்பாற்ற வேண்டும்"

"சரி உன்னைக் காப்பாற்றுகிறேன். முதலில் நீ பிடித்திருக்கும் வேரை விட்டுவிடு".

"வேரை விட்டுவிட்டால் கீழே விழுந்து இறந்து விடுவேனே?" அதன் பின் வானத்தில் குரல் எதுவும் கேட்கவில்லை.

*நீதி:* *வாழ்க்கையும் இப்படித்தான்!*
*நம்பிக்கைக்கு உரியவர்களை நம்பித்தான் ஆக வேண்டும்.*
*யாரையுமே நம்பாவிட்டால் நமக்கு வரும்*
*நல்ல வாய்ப்புகள் கை நழுவிப் போகும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றம்



ஓர் அரசன் ஒரு புலவருக்கு விருந்தளித்துக்கொண்டி ருந்தான். வானில் ஒரு கழுகு பாம்பு ஒன்றை தன் கால்களில் பற்றிக்கொண்டு அவ்வழியே பறந்து சென்றது.

பாம்பின் வாயிலிருந்து ஒரு துளி விசம் அரசன் வைத்திருந்த உணவுப் பாத்திரத்தில் விழுந்துவிட்டது.

அரசன் அந்த உணவை அந்த புலவருக்கு அளிக்க அதை உண்ட மறுகணமே அவர் இறந்து போனார். அரசன் மிகவும் வருத்தம் அடைந்தான்.

கர்மாக்களுக்கான வினை பயன்களை நிர்னயிக்கும் சித்திரகுப்தனுக்கு, இந்த கர்மாவின் பயனை யாருக்குக் கொடுப்பது என்று குழப்பமாகிவிட்டது.

கழுகிற்கா? பாம்பிற்கா? அல்லது அரசனுக்கா? கழுகு அதன் இரையை தூக்கிச் சென்றது.

அது அதன் தவறு இல்லை. விசம் இறந்து போன பாம்பின் வாயிலிருந்து வளிந்தது. அது பாம்பின் குற்றம் இல்லை. அரசனுக்கு உணவில் பாம்பின் விசம் கலந்தது தெரியாது.

அது அவனும் அறியாமல் நடந்த விஷயம். இது பற்றி எமதர்மனிடமே கேட்கலாம் என்று எமனிடம் சென்று தன் குழப்பத்தை கூறினான்.

சித்திரகுப்தன் கூறியதைக் கேட்ட எமதர்மன் “சற்று நேர சிந்தனைக்குப் பிறகு, “இதற்கான விடை விரைவில் கிடைக்கும், அதுவரை பொறுமையாக இரு” என அறிவுத்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சில நாட்கள் கழித்து, மற்றொரு புலவன் அரசனின் உதவியை நாட, அரண்மனைக்கு வழி தெரியாமல் சாலையோரம் வியாபாரம் செய்து கொண்டிருந்த பெண்மணியிடம் வழி கேட்டார்.

அப் பெண்மணியும் அவருக்கு சரியான பாதையை கூறியதோடு நில்லாமல் "இந்த அரசன் புலவர்களை கொல்பவன். அவரிடம் சற்று எச்சரிக்கையாக இருங்கள்.." என்றும் கூறினாள்.

இந்த வார்த்தைகளை அவள் கூறி முடித்ததும்தான் , அடுத்த நொடி சித்திரகுப்தனுக்கு தெளிவு பிறந்துவிட்டது. புலவரைக் கொன்ற கர்மாவின் வினைப்பயன் முழுவதும் இந்த பெண்மணிக்கே சேரும் என்று, அதற்கு காரணம் மற்றவர்கள் மீது வீண் பழி சுமத்தும்போது, அதன் பாவம் பழி சுமத்துபவருக்கு வந்து சேர்ந்துவிடும்.

உண்மையை உணராமல் அபாண்டமாகப் பழி சுமத்து வோருக்கு அந்த கர்மாவின் பயனை அவர் அனுபவித்தே தீர வேண்டும்.

எனவே, ஒரு விஷயத்தைத் திரித்து, பொய் சொல்லி, மற்றவர்கள் மீது பழி சுமத்தும் ஒவ்வொருவரும், அதற்கான வினைப் பயனை விரைவில் அனுபவித்தே தீர வேண்டும்.

ஆகவே, உண்மைகளை மட்டுமே சொல்லுவோம். நன்மைகளை மட்டுமே பெறுவோம்....

முற்றும்

**ஆக்கம்:**

***முஹம்மட் இஸ்மாயில் பாத்திமா சஜீனாஸ்***

531B, V.H. *வீதி, சாய்ந்தமருது* - 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மச்சானைத் தேடுகிறேன்




ஒல்லி ஒடம்புக்காரி
தெத்துப்பல் சிரிப்புக்காரி
அழகான குறும்புக்காரி
பால்வடியும் முகத்தழகி..

கண்ணழகில் காலமெல்லாம்
காலடியில் கெடப்பேனென்று
கவி படித்தமச்சானே!
எப்படித்தான் இரிக்கியளோ?

எங்குதான் போனியளோ?
இருபது வருசமாச்சி!
முதிர்கன்னி ஆகிவிட்டேன்
முடியில் நரைதெரிகிறது..

உண்மையாக சொல்லுகிறேன்
ஒருத்தருமே மனசிலில்லை
பத்தியமாத்தான் இருக்கேன்
புத்தாப் புது மனசோடு...
வந்துடுங்க மச்சானே!
முட்டப் பொரியலோட
தட்டுப் புளியாணமும்
வைத்துத்தர காத்திருக்கேன்...

சோத்துக்கு வாங்க மச்சான்
ஒரு பட்டப் பகலைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனசில செறுகின
வல்லுகமே...! மச்சானே..

பாசக்கார மச்சியத்தான் - வந்து
பாத்துவிட மனசில்லையோ ஒங்களுக்கு
நேசக்கரம் நீட்டுகிறேன்
வந்துடுங்க மச்சானே!

வட்ஸப்பும் எனக்கில்ல!
வைபரும் தெரியவில்ல
பேஸ்புக்கில் கணக்கில்ல
எப்படித்தான் தேடுவதோ...

பழைய கிழவி போல
கவி எழுதி புதுப் புனலில்
தூதுவிட்டு தேடுகிறேன் - மச்சான்
கவி பட்டுவிட்டால் வந்துடுங்க...

**ஆக்கம்:**

***யு. எல். ஆதம்பாவா***

*(முகாமைத்துவ உத்தியோகத்தர்)*

*சாய்ந்தமருது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்து காதல் தவிப்பு

## நாட்டார் கவி



கூவாதே சேவல் கோழி
குளறாதே தெலாந்தே– நீ
ஆடாதே மல்லிகைப் பூ
அவர் எழும்பிப் போகுமட்டும்...

என்ட கிளிக்கி
என்னுடனே இரக்கம் என்றால்
இளனி வெட்டி மூள் திறந்து
என்னிடத்தில் கொண்டுவரும்...

கருத்த கரும்பே– நீங்க
கண்போட்டு என்ன செய்ய
சூப்பி எறிஞ்சது போல்
நாலு மீச உங்களுக்கு...

மாமன் மகளே
மல்லிகைப் பூ மேனியரே
கட்டியணைக்க– நீங்க
கணக்கான பருவமல்லோ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளியே மொழியே—என்ட
கிள்ளிவெச்ச சுண்ணாம்பே
கன்னங் கருவிழியே – நான்
என்ன சொல்லி கூப்பிடட்டும்...

கண்டால் சிரிக்கிறதும்
கடும் பகடி பண்ணுறதும்
எட்டிஎட்டி பார்க்கிறதும்
என்னத்துக்கோ நானறியேன்...

ஒன்றுக்கும் ஆகவில்ல
நானுன்ன விரும்புறது
குறுஞ்சிரிப்பு சாடைக்கும்
குழி விழுந்த கன்னத்திற்கும்

என்ட கிளிக்கி
என்னோட இரக்கம் என்றால்
பட்டயில சோறுகட்டி
பறந்து வரும் என்னிடத்தில்

மலையோரம் கிளிநடந்தால்
வால் இழுத்த தடமிருக்கும்
அன்ன நட நடந்த
அடி மதிக்க கூடுதில்ல

ஓடி வருவாருகா
ஒழுங்கையிலே நிப்பாருகா
என்ன வரச் சொல்லுவாருகா– என்ட
வீட்டவர நாட்டமில்ல...

கோபித்துப் போன மச்சான்
கொழும்பிலிருந்து வருவாருகா
குடய எடுகாபுள்ள
கொஞ்சத் தூரம் போய் வருவோம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திட்டாய் என்று – நான்
தந்துவிட்டேன் தேன் வதையை
தின்றுட்டாய் என்று – நீ
தெருவழியே சொல்லிராதே...

காசி தரட்டா
கதச்சிருக்க நான் வரட்டா
தூதுவர காட்டிரட்டா– நீ
சொல் கிளியே உன் சம்மதத்த

அடிச்சா அடி மாறும்
அம்புபட்டால் புண்ணாறும்
கொள்ளி கொண்டு சுட்டாலும்
அந்தகொடிய புண்ணு ஆறுதில்ல...


கட்டிக் கறந்த நாகு
கணுவடிக்கு வந்த நாகு
தட்டிச் சொறிஞ்ச நாகு - இப்ப
தலகிழப்பிப் பாக்குதில்ல...

கூவாதே சேவல் கோழி
குளறாஏத தெலாந்தே– நீ
ஆடாதே மல்லிகைப் பூ
அவர் எழும்பிப் போகுமட்டும்...

**ஆக்கம்:**
***யு. எல். ஆதம்பாவா***
*(முகாமைத்துவ உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், சாய்ந்தமருது.)*
*G.M.M.S. வீதி, சாய்ந்தமருது* - **09**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியால் உயர்ந்த சமூகம்



இந்து சமுத்திரத்தின் மத்தியிலே
இதமான மனிதர்களின் புத்தியிலே
இன்னிசை கலந்த ரத்தத்திலே
ரத்தத்தோடு ரத்தமாய் இணைந்த
சமூகம் நாங்கள்...

உதிக்கும் கிழக்கினிலே
உப்புக் கடலினிலே
ஓயாமல் உழைக்கணும் நாங்கள்
தெரிந்து கொள்ளுங்கள்
எங்கள் அலைகள் சிகரத்தை கூட
தொட்டு விட்டன...

படித்துப் படித்து தெளிவு பெறாத
பல தேடல்களுக்கு மத்தியில்
எறும்பாய் உழைத்த
இதயங்கள் நாங்கள்...

பட்டம் என்ற நான்கெழுத்தை
கல்வி என்ற மூன்றெழுத்தால்
வென்றெடுத்த வெற்றியாளர்கள்
நாங்கள்...

வாழ்க்கை என்ற சிக்கலை
கணிதம் என்ற சிக்கலால்
பிரித்த கணிதவியலாளர்கள் நாங்கள்...

வானுக்கும் கூட எல்லைகள் உண்டு
ஆனால் எங்கள் கடமைக்கு
எல்லைகள் இல்லையென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்து நிற்கும் ஆசான்கள்
நாங்கள்...

வல்லரசால் கட்டுப்படுத்த முடியாத
வைரசை கட்டுபடுத்த
கண்ணாய் விழித்து பாடுபடும்
வைத்தியர்கள் நாங்கள்...

கனவுகள் மெய்பட
கண்டு பிடிப்புக்களை
கைவண்ணமாக்கித் தருபவர்கள்
நம் நாட்டு விஞ்ஞானிகள்...

காட்டுத் தீயை போன்று
பற்றிக் கொண்டவர்கள்
நம் நாட்டு எழுத்தாளர்கள்
அவர்களை அழிப்பதும் எளிதானதல்ல
அவர்களின் ஆயுதம் "வாள்" அல்ல
பேனா முனையே!
வாளை விட கூரியது அவர்களது
ஆயுதம்...

முகந் தெரியாத நபருக்கு
தாயாக இருந்து
முகவரி கொடுத்த தாதிகள்
நீங்கள்...

கல்விக்கு எல்லை இல்லை
என்போர் போல்
எங்கள் கடமைக்கு
எல்லை இல்லையே!

கற்றல் என்பது சிறிதல்ல
கடந்து வந்த பாதைகளும் எளிதல்ல
முட்கள் நிறைந்த சாலைகளிலே
வெற்றிநடை போட்ட சமூதாயம் நாங்கள்
தேடலுடன் நகர்கிறது எங்கள் பயணம்
இனியும் தொடரும்...

எங்களை கற்றவர்கள் என்று
சொல்வதும் புதிதும் அல்ல
கருவறையில் விடுத்து
பூமியின் தாயின் மடியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்த நொடிகளில் துவங்கிய
இலக்குகள் நாங்கள்...

வாழ்க்கை எனும் வெள்ளத்தில்
தத்தளிக்க விரும்பும் எறும்புகள்
அல்ல நாங்கள்
இலையை படகாக்கி பயணம்
செய்ய விரும்பும்
சமூகம் நாங்கள்...

தெரிந்து கொள்ளுங்கள் நாங்கள்
கல்வியால் உயர்ந்த சமூகம்
கற்றசமூகம் மண்ணின் வரம்
வளர்ப்பதே மனித குணம்...

**ஆக்கம்:**


***பாறுக் பாத்திமா பர்ஜிஸ்***

165/B, *ஹாஜியார் வீதி,*
*சாய்ந்தமருது* - 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகம் எம் உயிர் நாடி
# பழியுங்கள் பயன் பெறுங்கள்




ஒரு ஜனநாயகநாட்டின் நிதி, நிர்வாகம் சட்டவாக்கத் துறையான பாராளுமன்றம் என்ற மூன்று தூண்களுக்கும் நிகராக அந்த நாட்டை தாங்கி நிற்கும் பெரும் சக்தியாக பெரும் நான்காவது தூணாக ஊடகத்துறை விளங்கு கிறது. ஒரு எழுத்தாளன் அல்லது கவிஞன், ஊடகவியளாளன் அல்லது பல்துறை சம்பந்தமான விடயங்களில் எழுத்தைக் கையாழுகிற ஒவ்வொருவரும் இன்றைய கால கட்டத்தில் பலவற்றை கற்றிருக்க வேண்டும்.

அல்லது முடியுமானவரை தேடலுடன் ஊடக ஒழுக்கதுடன் ஊடகங்கள் மட்டுமன்றி நாம் எழுதுகிற போதும் பேசுகிற போதும் அதில் ஒழுக்கம் இருப்பது சாலச் சிறந்ததாகும். ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும் என்ற கருத்திற்கமைய எவனிடம் ஒழுக்கம் இல்லையோ அவனிடம் ஒழுக்கமான படைப்புக்களைக் காண முடியாது. வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை என முன்மாதிரியான பல ஊடகங்கள் இருந்தாலும், நாம் அதிகமானோர் கையாளும் வட்சப், முகநூல் போன்ற சமூக ஊடகங்களை கையாளுகிறவர்கள் ஒரு கவிதை படைத்தாலும் கதை ஒன்றை பகிர்வதனாலும் சரி ஒரு கருத்தை சொல்வதனாலும் சரி தனிநபர் தாக்குதல், தனிப்பட்ட தாக்குதல், விமர்சனங்கள் அதில் இருக்க கூடாது. முழு நாட்டையுமே போடுகிற சக்தி, அரசாங்கத்தை மாற்றுகிற சக்தி இந்த ஊடகங்களை கையாளும் ஒவ்வொருவருடைய கைகளுக்கே உள்ளது. கடந்த கால கசப்பான உணர்வுகளில் சில இனங்களிடையே வன்முறை அதிகம் வெடிப்பதற்கும் இந்த சமூக ஊடகம் பிரதான பங்கு வகித்ததை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். சமூகத்தில் எவ்வாறான கருத்தை விதைத்தால் எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்தும் சமூகத்துக்கு அது பயன் உள்ளதா என யோசித்தே நாம் எழுத்துக்களை கையாள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது எப்படியோ எமது நாட்டில் ஊடக சுதந்திரம் என்பது உயிர் வாழ்கிறது என்பதற்காக நினைத்தபடி எல்லாவற்றையும் வெளிக் கொண்டுவர முடியாது.

ஊடகம் என்பதனை கருத்தியல் ரீதியான முறையில் நோக்குவதைவிட அனுபவரீதியாக நோக்கும் பண்பு எல்லாருக்கும் இருக்கவேண்டும். அப்போதுதான் செய்தி என்ன ஆளுமையிலும் இலக்கியத்திலும் ஒழுக்கவிய லைக் காணலாம். தம்மை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தும் ஒரு துறையாகவே இன்றைய இளசுகள் ஊடகத்தை நேசிப்பதுடன் அதில் இணைந்து நாமும் நிகழ்ச்சி தொகுப்பாளராகமாற வேண்டும் புகழ் பெற வேண்டும் என நினைத்து அதுக்கான முயற்ச்சிகளில் ஈடுபடுவதனை அவதாணிக்க முடிகிறதே தவிர அதை முறையாக கற்றுக் கொண்டு சாதிக்க வேண்டும். ஊடகத்தின்பால் கல்வி அறிவை பெருக்க வேண்டும். என்று பலர் நினைப்பதில்லை. ஊடகக் கல்வி என்பதை பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை மேற்கொண்டு அந்த துறையில் கலாநிதி PhD வரை செல்லாம் என்பது பலருக்குத் தெரியாத உண்மை. இன்று அரசு A/L இல் ஊடகப் பாடத்தையும் அறிமுகம் செய்திருக்கிறது. எதிர் காலத்தில் ஊடகத்துறையில் ஆசிரியர்களை விரிவுரையா ளர்களை உருவாக்கும் நோக்கத்தை அரசு கொண்டுள்ளது. விரைவில் ஊடக அமைச்சினால் ஊடகக் கல்விக் கூடங்களை மாவட்டத்துக்கு ஒன்று என்ற ரீதியில் உருவாக்க இருக்கிறார்கள். இதனை இளைஞர் யுவதிகள், இத்துறையில் ஆர்வம் உள்ளவர்கள் பயன் படுத்த வேண்டும்.

செய்தி வாசிப்பு, நேர்காணல், உச்சரிப்பு, மேடை அறிவிப்பு, வர்னனை, செய்தி அறிக்கை, தயாரிப்பு போன்றவைகள்தான் ஒரு ஒளிபரப்பளருக்கு தேவை என்கிற நிலைமையில் மட்டும் இருந்து விடாமல் தேடல் மிக்க எழுத்தாளனாய், நல்ல கலைஞனாய், நல்ல படைப்பாளியாய், ஊடகவாதியாய், துறையை நன்கு கற்றவனாய், மனித நேயமுள்ள சமூகவாதியாய் ஊடகத்தை பயன்படுத்த தொடங்கினால் எமது சமூகத்தில் மாற்றம் வரும் அந்த மாற்றத்தை நாம ஒவ்வொருவரும் நம்மில் இருந்து தொடங்க வேண்டும்.


**ஆக்கம்:**

***கலைஞர் ஏ. எல். அன்ஸார்***


*ஊடகவியல் மாணவர் (தெ.கி.ப.க.)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2020ல் எமைவிட்டுப் பிரிந்த கலைஞர்கள்

## சேகு அப்துல் காதர் ஆதம்பாவா



18.10.1943ம் ஆண்டு பிறந்த இவர் உசைன் பக்கீர் பைத்தில் மிகப் பிரசித்தமானவர். இனிமை யான குரலில் பாடக்கூடியவர். கலாசாரத் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட பல றபான் இசைப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசில்களை வென்றவர்.


மருதம் தக்வா கோலாட்டக் குழு என்ற பதிவு செய்யப்பட்ட அமைப்பினை உருவாக்கி வழிநடாத்திய இவர் பொல்லடிக் குழுவிற்குத் தலைவராகவும் அண்ணாவியாகவும் இருந்து பொல்லடிக் கலையை முன்னெடுத்து வந்தார். அத்தோடு பொல்லடிக் கலையை இளம் சமுதாயத்தின் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் பாடசாலை மாணவர்களி லிருந்து பல பொல்லடிக் குழுக்களை உருவாக்கினார்.

பக்கீர் பாவாக்களின் கலீபாப் பட்டம் பெற்ற இவர் கலாபூசணம் விருது, கிழக்கு மாகாணதத்தின் முதியகலைஞர் விருது என்று உயர் விருதுகளைப் பெற்றதோடு சான்றிதழ்கள் பாராட்டுக்கள் பல பெற்று இந்த மண்ணுக்குப் பெருமை சேர்த்தார். இவர் 13.04.2020ம் திகதி காலமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதுமா லெவ்வை ஆதம்பாவா



15.06.1939ம் ஆண்டு பிறந்த யூ.எல். ஆதம்பாவா ஓர் ஓய்வு பெற்ற ஆசிரியராவார். சாய்ந்தமருதின் இலக்கியப் பரப்பிலே பெரும் பங்காற்றிய ஒருவர். உருவகக் கதைகள் எழுதுவதில் ஒப்பற்றவர். இவரது பல உருவகக் கதைகள் தேசிய பத்திரிகைகளில் தொடர்ச்சியாக வெளிவந்துள்ளன. 1961ம் ஆண்டு 'நாங்கள் மனித இனம்' என்ற உருவகக் கதைத் தொகுதி ஒன்றை வெளியிட்டார்.

மேலும் பத்திரிகைகளில் சிறுகதைகள், கவிதைகள் என்று எழுதி வந்த இவரின் சிறுகதைத் தொகுதிகளாக 1997ல் 'காணிக்கை', 2007ல் 'சாணையோடு வந்தது' என்று இரண்டு நூல்களையும், 2002இல் 'குருதி தோய்ந்த காலம்' என்ற கவிதைத் தொகுதியையும் வெளியிட்டார். அத்தோடு 'பகலில் ஒரு சூரியனின் அஸ்தமனம்' என்ற இரங்கற் கவிதைத் தொகுதியையும் வெளியிட்டு சாய்ந்தமருது மண்ணுக்குப் பெருமை சேர்த்தவர்

இவர் 1999ம் ஆண்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கலாபூசண விருதும், 2005ம் ஆண்டு இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபையின் கலைஞர்களுக்குரிய உயர் விருதான ஆளுணர் விருதும் பெற்று இலக்கியத் துறையில் முன்னிலை வகித்த இவர் 02.06.2020 ம் திகதி காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்துல் மஜீட் சித்தி கைறுன் நிஸா



01.06.1064ம் ஆண்டு பிறந்த இவர் கலைமகள் ஹிதாயா மஜீட், கலைமகள் ஹிதாயா றிஸ்வி என்ற பெயர்களில், சர்வதேச ரீதியில் இலக்கியத் துறையில் புகழ் பெற்றவர். நாடறிந்த ஒரு கவிஞரான இவர் 1985 - 2000 ம் ஆண்டுவரை தடாகம் என்ற இலக்கிய சஞ்சிகையை தொடர்ச்சியாக வெளியிட்டவர். அதனூடாக பல இளம் கவிஞர்களுக்கு கவிதைக்கான களம் அமைத்துக் கொடுத்தார்.

1991ல் 'நாளையும் வரும்' என்ற புதுக் கவிதைத் தொகுதியையும், 2000ம் ஆண்டு 'தேன் மலர்கள்' என்ற கவிதைத் தொகுதியையும், 'இரட்டைத் தாயின் ஒற்றைக் குழந்தை' என்ற கவிதைத் தொகுதியை இன்னும் ஒருவருடன் சேர்ந்தும் வெளியிட்ட இவர் பத்திரிகை, வானொலி என்று இலக்கியத் துறையில் முன்னிலை வகித்தார்.

தடாகம் கலை இலக்கிய வட்டம் என்ற இலக்கிய அமைப்பினூடாக இணையத்தளத்தின் மூலம் சர்வதேச ரீதியாக கவிஞர்களிடையே கவிதைப் போட்டிகளை நடாத்தி கவித்துவத்தை வளர்த்து வந்தார். இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் என்று பல நாடுகளிலும் பல கவிதை நிகழ்வுகளில் கலந்துகொண்டவர். தனது அமைப்பினூடாக பலரின் கவிதை நூல்களை வெளியீடு செய்த ஒருவர்.

இளம் படைப்பாளி, தேசமான்ய, இரத்தினதீபம், பாவரசு என்ற விருதுகளையும் காவியத் திலகம், கலை மாமணி என்ற சர்வதேச விருதுகளுடன் இன்னும் பல விருதுகளையும் பெற்ற இவர் 23.11.2020ம் திகதி காலமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆளுமை



சரிந்தது ஓர் இலக்கிய இமயம்
கலாபூஷணம் மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீட்

டிசம்பர் இருபத்தாறு ஆழிப்பேரலை அழித்த நினைவுகளில்
இதயம் மேய்ந்த வேளை இவ்வூரின் எழுத்தின் இமயம்
மாஸ்டர் மஜீத் மரணித்த செய்தி துயரத்தில் மூழ்கடித்தது

மூத்த இலக்கியவாதி பன்னூல் ஆசிரியர் நாடறிந்த கவிஞர்
நிறைந்த கல்விமான் ஆய்வுக் கட்டுரைகளிலும் பிரியமானவர்
அரங்கு சோபிக்கும் இவர் பேச்சினிலே

கலாசார பிரிவின் இலக்கிய மலரை கலை இலக்கியம் என பெயரிடவைத்த
பல்துறை ஆற்றலின் ஊற்று
அவர் பொல்லடி பற்றிய பத்தியெழுத்தை இவ்விதழில் அலங்கரிக்க
விடும்வரை எம்மோடு ஒன்றியிருந்த இலக்கிய ஆளுமை

எமைவிட்டு இவ்வாண்டு விடைபெற்ற காதர் பாவா, கலைமகள் ஹிதாயா,
யூ எல் ஆதம்பாவா எனும் மூவர் பற்றி எழுதிமுடித்து தலைநிமிர்ந்தபோது
என்னையும் சேர்த்து எழுதுங்கள் என்றா அவசரமாக புறப்பட்டுச் சென்றீர்கள்

மறைந்த கவிஞர் யூ எல் அவர்களுக்கு இரங்கல் ஒன்று
வேண்டும் என்று மறுநாளே எங்களை தட்டி எழுப்பியது இன்னும்
நினைவுகளாய்த் தடவுகிறது

வலயக் கல்விப் பணிப்பாளராக இணைந்த வடகிழக்கின் கலாசார திணைக்களத்தின்
பணிப்பாளராக முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அரசியலிலும் பெருந்தலைவரோடு
பயணித்த ஒருவர் பதினெட்டு நூல்கள் தந்த சாதனையாளர்

என் தந்தையாரின் பால்ய நண்பர் என்றும் பெருநாள் தொழுகையின் பின்னே
அவரின் முதல் சந்திப்பு என் தந்தை அந்த உரிமை என்னிலும் அவருக்கு

தனித்துவமான ஆடை தோளில் ஒருபை சிரித்த முகம் கலகலப்பான பேச்சு
மஜீத் சேர் இன்னும் எங்களோடு இருப்பதான நினைவலை மேலெழுகிறது
அல்லாஹ் அன்னாரை பொருந்திக்கொண்டு மேலான சுவனத்தை வழங்குவானாக

***கலாசார பிரிவு மற்றும் கலாசார அதிகாரசபை***

***எம்.ஐ.எம். அஷ்ரப்***
கலாசார உத்தியோகத்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2019, 2020 இல் கலாசார பிரிவினால் நடைபெற்ற வேலைத் திட்டங்கள்

01. கிராமசக்தி இசைநிகழ்ச்சி.

02. அர்த்தமுள்ள சுதந்திரதின விவாதப் போட்டி.

03. மகளிர் தினகவியரங்கு.

04. போதைஒழிப்பு விழிப்புணர்வு வீதி நாடகம்.

05. அரபு எழுத்து பயிற்சிபட்டறை.

06. சுதந்திரவானம் தேசிய பட்டம் ஏற்றல் நிகழ்வு.

07. பாரம்பரியவிளையாட்டு.

08. பிரதேச கலை இலக்கிய விழா.

09. சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வு நாடகம்.

10. விஷேடதேவையுடைய கலைஞர்களின் கலை விழா.

11. சுவதம்.

12. சிறுவர் தினம்.

13. கலைஞர் கொடுப்பணவு.

14. இரங்கல் கவியரங்கு.

15. கவிதைக் களம்.

16. மரணித்தகலைஞர் வீடு செல்லல்.

17. கலை மன்றங்களின் கொடுப்பணவு

18. முஹர்ரம் கவியரங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச மற்றும் மாவட்ட மட்ட இலக்கிய விழா -2020/2021

## பெறுபேறுகள்

மாவட்ட செயலக பிரிவு: அம்பாரை

பிரதேச செயலக பிரிவு: சாய்ந்தமருது

மொழி மூலம்: தமிழ்

## பாலர் பிரிவு

| இலக்கம் | போட்டி | பெயர் | முகவரி | பெற்ற நிலை |
|---|---|---|---|---|
| 1 | கையெழுத்துப் போட்டி | பாறுக் பாத்திமா நிஹா | 186, ஹமீதியா வீதி, சாய்ந்தமருது - 13 | 1 |
| | | முஹம்மட் பைசர் ஸைனப் ஹுதானி | 220A, மர ஆலை வீதி, மாளிகைக்காடு மேற்கு | 2 |
| | | அப்துல் சத்தார் முஹம்மது அன்ஸிப் | 128A, வோக்கடி வீதி, சாய்ந்தமருது - 01 | 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் பிரிவு

| இலக்கம் | போட்டி | பெயர் | முகவரி | பெற்ற நிலை |
|---|---|---|---|---|
| 1 | கவிதை பாடல் | நாசர் பாத்திமா சபீனாஸ் பேகம் | 380A, பழைய சந்தை வீதி, சாய்ந்தமருது-3 | 1 |
| | | ஜாஹிர்கான் அதீனா | 447/A ஆஸ்பத்திரி வீதி, சாய்ந்தமருது - 06 | 2 |
| | | இர்பான் முஹம்மட் அப்சல் சபி | 518, அல்ஹிலால் வீதி, சாய்ந்தமருது - 14 | 3 |
| 2 | கையெழுத்து | அப்துல் ஜலால் ஜன்சாத் சனாபீல் | 232/2, G.M.M.S. வீதி, சாய்ந்தமருது - 09 | 1 |
| | | முஹம்மட் ஜர்மின் அம்னா ஷப்கத் | 130A , நகரமண்டப வீதி, கல்முனை - 14 | 2 |
| | | ஜெலில் பாத்திமா றிஸ்பா | 154,A/5, கிராமோதய வீதி, சாய்ந்தமருது - 12 | 3 |
| | | முஹம்மது ஜெஸ்மீர் பாத்திமா செய்னப் | 125,A/3, வோக்கடி லேன், சாய்ந்தமருது - 01 | 3 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனிஷ்ட பிரிவு.

| இலக்கம் | போட்டி | பெயர் | முகவரி | பெற்ற நிலை |
|---|---|---|---|---|
| 01 | கட்டுரை | முஹம்மட் றிஸ்மி சீனத் ஸிம்ஹா | 397, பழைய சந்தைவீதி, சாய்ந்தமருது - 03 | 01 |
| | | நௌசாத் பாத்திமா ஹஸ்னூன் ஸமா | 370/A,ஜின்னாலேன், சாய்ந்தமருது - 11 | 02 |
| | | ச.ஆ. ஆபித் அஸ்மான் | 654B,வீச் வீதி, சாய்ந்தமருது – 14 | 03 |
| 02 | கவிதை எழுதுதல் | றிபாய் முஹம்மட் பிர்னாஸ் | 289, A/TMவீதி, சாய்ந்தமருது - 06 | 01 |
| | | சம்சுல் ஆரிபீன் பாத்திமா அஹ்னா | 654, வீச் வீதி, சாய்ந்தமருது – 14 | 02 |
| | | அஸ்வர் பாத்திமா சுஹாரா | 569, கபூர் வீதி, சாய்ந்தமருது – 16 | 03 |
| 03 | கவிதை பாடல். | நாசர் பாத்திமா நிப்லா பேகம் | 834, தண்டயல் வீதி, சாய்ந்தமருது -17 | 01 |
| | | முஹம்மட் தௌபீக் பாத்திமா றிஹானா பேகம் | 858,குத்தூஸ் வைத்தியர் வீதி, சாய்ந்தமருது - 15 | 02 |
| | | ஜமால்தீன் முஹம்மட் இம்தாத் | 178, கடற்கரை வீதி, மாளிகைக்காடு–கிழக்கு | 03 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரேஷ்ட பிரிவு

| இலக்கம் | போட்டி | பெயர் | முகவரி | பெற்ற நிலை |
|---|---|---|---|---|
| 01 | கட்டுரை | முஹம்மது மன்சுர் பாத்திமா றுஸ்தா | 397, தண்டயல் வீதி, சாய்ந்தமருது - 17 | 01 |
| | | சம்சுல் ஆரிபீன் பாத்திமா ஆதிலா | 654, வீச் வீதி, சாய்ந்தமருது – 14 | 02 |
| | | அஸ்வர் முஹம்மட் ஹாபில் | 569, கபூர் வீதி, சாய்ந்தமருது – 16 | 03 |
| 02 | பாடல் நயத்தல் | பாறுக் பாத்திமா பர்ஜிஸ் | 165/B, ஹாஜியார் வீதி, சாய்ந்தமருது - 12 | 01 |
| | | முஹம்மட் பஸீத் முஸ்தபா | 654, ஜின்னா வீதி, சாய்ந்தமருது – 14 | 02 |
| 03 | நாடகப் பிரதி எழுதுதல் | முஹம்மது மன்சுர் பாத்திமா றுஸ்தா | 837, தண்டயல் வீதி, சாய்ந்தமருது – 17 | 01 |
| | | றஷாக் அப்ரின் பானுான் | 739/B, பழைய தோம்புதோர் வீதி, சாய்ந்தமருது -17 | 02 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *18 வயதிற்கு மேற்பட்டவர்கள்*

| இல. | போட்டி | பெயர் | முகவரி | பெற்ற நிலை |
|---|---|---|---|---|
| 01 | பாடல் ஆக்கம் | அஸ்மியா அஸ்ரப் | 489, ஆஸ்பத்திரி வீதி, சாய்ந்தமருது - 07 | 01 |
| | | முஹம்மட் இஸ்மாயில் சஜ்னாஸ் | 531, வீ.எச் வீதி, சாய்ந்தமருது – 14 | 02 |
| | | கோஸ் முஹம்மட் அப்துல் அஸீஸ் | 91/1A, கல்யாண வீதி, சாய்ந்தமருது - 11 | 03 |
| 02 | நாட்டார் கலை கற்றல் | உதுமா லெப்பை ஆதம்பாவா | 200, G.M.M.S. வீதி, சாய்ந்தமருது - 09 | 01 |
| | | ஆதம்பாவா மீராசாஹிப் | 889/1, மாளிகா வீதி, சாய்ந்தமருது – 17 | 02 |
| 03 | சிறு கதை | அப்துல் றஹிம் பாத்திமா ஸப்னா | 284D, ஒஸ்மான் வீதி, சாய்ந்தமருது -06 | 01 |
| | | மனாப் றுக்ஸானா பேகம் | 285 B/1, மாவடி வீதி, சாய்ந்தமருது – 06 | 02 |
| | | முஹம்மது அப்துல் கரீம் சித்தி ஜெஸினா | 151D, வில்லா பறக்கத், பழைய தபாலக வீதி, சாய்ந்தமருது – 10 | 02 |
| 04 | சிறுவர் கதை | முஹம்மட் இஸ்மாயில் சஜ்னாஸ் | 531, வீ.எச். வீதி, சாய்ந்தமருது -14 | 01 |
| | | முஹம்மது நிஸ்ரின் முஹம்மது நப்ரிஸ் | 151D, வில்லா பறக்கத், பழைய தபாலக வீதி, சாய்ந்தமருது – 10 | 02 |
| | | ஆதம்பாவா பாத்திமா வாஸிதா | 289/D, P.M. வீதி, சாய்ந்தமருது – 06 | 02 |
| 05 | கவிதை எழுதுதல் | கோஸ் முஹம்மட் அப்துல் அஸீஸ் | 91/1A, கல்யாண வீதி, சாய்ந்தமருது -11 | 01 |
| | | அப்துல் ஜப்பார் ஜெஸ்லி பெனாசிர் | 475/1, பிரதான வீதி, சாய்ந்தமருது – 16 | 02 |
| | | நசார் பாத்திமா குல்சான் ரசாஅதா | 275, ஒராபிபாஷா வீதி, சாய்ந்தமருது – 01 | 03 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2020 இன் நிகழ்வின் நிழல்கள்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org